பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 04 ஞாயிற்றுக்கிழமை 19.07.2020 கதிர் 252

### இனி அது ரகசியம் அல்ல!

எல்லா விடயங்களையும் அரசியலாக்குவது அபத்தமானது.

அப்படி ஒரு கைங்கரியத்தை வடக்கின் முன்னாள் ஆளுநர் சுரேன் இராகவன் செய்திருக்கின்றமை நகைப்புக்கிடமாகியிருக்கின்றது.

யாழ்.பல்கலைக் பக்கம்02 »

# 20 வருடங்கள் 'மொட்டு' ஆட்சி; எவரும் கவிழ்க்கவே முடியாது!



## மார்தட்டுகின்றது ராஜபக்ஷ அணி

நாட்டில் இருபது வருடங்களுக்கு மேல் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஆட்சி தொடரப்போகின்றது. எவரும் இந்த ஆட்சியைக் கவிழ்க்கவே முடியாது. ராஜபக்ஷக்களின் தலைமையில் புதிய சரித்திரத்தை நாம் படைப்போம்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சீ.பி.ரத்நாயக்க தெரிவித்தார். பக்கம் 02 »

## இலங்கை வருவதை ரத்து செய்த ஐரோப்பிய கண்காணிப்பாளர்கள்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூலை 19

நாடாளுமன்றத் தேர்தலைக் கண்காணிப்பதற்காக வருகை தரவிருந்த ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் குழு தனது பயணத்தை இறுதி நேரத்தில் இரத்துச் செய்வதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் 5 ஆம் திகதி பக்கம் 02 »

## அதிகளவான பக்தர்களை நல்லூருக்கு அனுமதிக்குக!

### பிரதமர் மஹிந்த உத்தரவு



கொழும்பு, ஜூலை 19

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந் திருவிழாவில் அதிக எண்ணிக்கை பக்தர்கள் கலந்து கொள்வதற்கு அனுமதிக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

வடக்கில் பயணம் மேற்கொண்டுள்ள இராணுவ தளபதியும் கொரோனா தடுப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவருமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தப் பக்கம் 02 »

## மாற்று அணிக்கு வாக்களித்தால் தமிழர் நிலை பலவீனமடையும்!



### சுமந்திரன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 19

மாற்று அணி எனத் தெரிவித்து ஓரிரு ஆசனங்களை இலக்கு வைப்பவர்களுக்கு வாக்குகளை பக்கம் 02 »

## புலிகள் போன்று செயற்படாதீர்கள்!

### கூட்டமைப்புக்கு அரசு மிரட்டல்



கொழும்பு, ஜூலை 19

சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழீழ விடுதலைப்புலிகள் போன்று பேசுவதையும், அவர்கள் போன்று செயற்படுவதையும் உடன் நிறுத்த வேண்டும். நாட்டின் இறையாண்மைக்குக் கூட்டமைப்பினர் மதிப்பளிக்க வேண்டும்.

– இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

'அரசியல் தீர்வுக்காக அரசிடம் நாம் அடிபணியமாட்டோம். எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் தமிழர்கள் விரும்பும் தீர்வைத் தந்தே பக்கம் 02 »

## 208 பேர் கைது

கொழும்பு, ஜூலை 19

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் இதுவரை 208 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் இதுவரை பக்கம் 02 »










## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கழகத்தின் சட்ட முதுநிலை விரிவுரையாளர் பதவியில் இருந்து கலாநிதி குமாரவடிவேல் குருபரன் விலக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கின்றமை துரதிஷ்டவசமானது.

அத்தகைய நெருக்கடி ஏற்படுத்தப்பட்டமை தொடர்பில் தமிழரின் அறிவு ஜீவிகளே – புலமைத்துவத் துறையைச் சேர்ந்தோரே – கொதித்துப் போயிருக்கின்றனர் என்பது உண்மை.

அனேகமாகத் தமிழர்கள் மத்தியில் கற்றறிந்தோர் எல்லோரும் கலாநிதி குருபரன் பக்கத்தில். அவருக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பில் ஒட்டுமொத்தத் தமிழினமுமே வெஞ்சினத்தில் உள்ளது என்பது கண்கூடு.

இந்த உணர்வுபூர்வமான விவகாரத்தில் அரசியல் செய்ய விழைகிறார் போலும் முன்னாள் ஆளுநர்.

ஒரு கல்விமானாகக் கலாநிதி குருபரனுக்கு ஆதரவைத் தெரிவிக்கும் விதத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவைக் குழு உறுப்பினர் பதவியிலிருந்து தாம் இராஜினாமானச் செய்யத் தீர்மானித்துள்ளார் எனவும் –

இது தொடர்பாக உயர்கல்வி அமைச்சரைச் சந்தித்துத் தனது இராஜினமாக் கடிதத்தைக் கையளிக்கப் போகின்றார் எனவும் –

அறிவித்திருக்கின்றார் சுரேன் இராகவன்.

இதில் வேடிக்கை என்னவென்றால், யாழ்.பல்கலைக்கழகப் பேரவைக் குழு உறுப்பினர் பதவியில் தொடர முடியாத நிலையில் இருக்கும் இராகவன், உணர்வுபூர்வமான குருபரனின் விவகாரத்தைக் காட்டித் தாம் இராஜினமாச் செய்கின்றார் என்று அறிவித்தமைதான்.

கடந்த பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி யாழ் பல்கலைக்கழகப் பேரவைக்குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டார் சுரேன் இராகவன்.

இந்த ஐந்தரை மாத காலத்தில் பேரவையின் பல கூட்டங்கள் நடைபெற்று முடிந்து விட்டன. மேலதிகமாகவும் பல விசேட கூட்டங்கள் நடந்துள்ளன.

பேரவைக்கு நியமிக்கப்பட்ட காலத்தில் இருந்து இன்று வரை பேரவையின் எந்தக் கூட்டத்துக்கும் சுரேன் ராகவன் சமுகமளிக்கவுமில்லை, அப்படிச் சமுகமளிக்காமை குறித்து முன்னறிவித்தல் வழங்கி அனுமதி பெறவுமில்லை.

இப்போது அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசியப் பட்டியல் வேட்பாளரில் ஒருவர். குறைந்தபட்சம் அப்படி வேட்பாளராக இருப்பதைக் காட்டி, அதன் காரணமாகப் பேரவை உறுப்பினர் பதவியில் இருந்து தேர்தல் முடியும் வரை விடுமுறையில் இருக்க அனுமதி கோரியிருக்கலாம். அதையும் அவர் செய்யவில்லை.

பல்கலைக்கழக சட்ட விதிகளின்படி பேரவை உறுப்பினர் ஒருவர் மூன்று கூட்டங்களுக்குத் தொடர்ந்து வராவிட்டால் அவர் தாமாகவே அப்பதவியை இழந்தவராவார்.

பேரவைக்கு நியமிக்கப்பட்ட காலம் முதல் பேரவைக் கூட்டங்களுக்கு ஐந்தரை மாதங்களாகச் சமூகமே தராதவர் – தொடர்ந்து மூன்று கூட்டங்களுக்கு மேல் முன் அனுமதி பெறாமல் சமுகம் தரத் தவறியமையால் பதவியை இழந்துவிட்டவர் – இப்போது கலாநிதி குருபரன் விவகாரத்தைக் காட்டி இராஜினமா நாடகம் நடத்துவது அபத்தம்.

உண்மையில், கலாநிதி குருபரன் விவகாரம் போன்றவை தொடர்பில் கற்றறிந்த சுரேன் இராகவன் போன்ற புத்திஜீவிகள் பல்கலைக்கழகப் பேரவைக்குச் சென்று அதனைத் திருத்தி ஒழுங்காக இயக்குவதுதான் சரியான நடவடிக்கையாக இருந்திருக்கும்.

பதவிநியமனத்தைப்பெற்றுக் கொண்ட சுரேன் இராகவன் போன்ற படித்தவர்கள் பேரவைக்கு ஒழுங்காகச் செல்லாமல் நடந்து கொண்ட விட்டேத்தித்தனமும் குருபரன் போன்றோருக்கு அநீதி இழைக்கப்படும் விவகாரங்களுக்குக் காரணம் என நான் நினைக்கிறேன்.

நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே...?

– மின்னல் –

## மாற்று அணிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அளித்தால், தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாடு பலவீனமடைந்து விடும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இதன்போது, ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

முக்கியமான ஒரு கேள்வியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன செய்தது என்ற கேள்வி மக்களிடத்தில் முன்வைக்கப்படுகிறது.

கடந்த ஐந்து வருடங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிக அபிவிருத்தித் திட்டங்கள், மக்களுக்கான செயற்றிட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு நிறைவேற்றப்பட்ட விடயங்களை மக்கள் அறிந்து கொள்வதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் வெவ்வேறு அறிக்கைகளாக அடுத்த வாரம் வெளியிடவுள்ளோம். இம்முறை தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் இரண்டு முக்கிய விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

முதலாவதாக, தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பான எமது நிலைப்பாட்டை மீளவும் உறுதியாக தெரிவித்துள்ளோம். அதனை எவ்வாறு அடைய முற்படுகின்றோம் எனவும் கூறியுள்ளோம்.

அத்துடன், எமது மக்களின் பொருளாதார மேம்பாடு சம்பந்தமாகவும் அதைக் கையாளும் சில விடயங்களையும் முன்மொழிவுகளாக முன்வைத்துள்ளோம்.

தற்போது ஆட்சிக்கு வந்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, 19ஆம் திருத்தச் சட்டத்தை நீக்க வேண்டும் எனவும், 13ஆம் திருத்தச் சட்டத்தை மாற்றுவதற்கும் மக்களிடம் ஆணை கேட்கிறது.

இந்த சூழ்நிலையில், வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் சார்பாக அனுப்பி வைக்கிற பிரதிநிதிகள், ஒரே அமைப்பாக, ஒற்றுமையாக, செல்வது அவசியம் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம்.

மாற்று அணிகள் என்று, எங்களுக்கும் சந்தர்ப்பம் கொடுங்கள் என்று பலர் கேட்டு வருகிறார்கள். அவர்கள் ஓர் ஆசனம், இரண்டு ஆசனத்தை இலக்கு வைத்துத் தேர்தலில் போட்டியிடுகின்றவர்கள்.

அவர்களுக்கு ஒன்று அல்லது இரண்டு ஆசனங்களை மக்கள் கொடுக்கின்றபோது, அது தமிழ் மக்களுடைய அரசியல் நிலைப்பாட்டை வெகுவாகப் பாதிக்கும் என்பதுடன் பலவீனப்படுத்தும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்றுதான் இன்று மக்களுடைய அபிலாஷைளை முன்னிறுத்தி பலமான அணியான 20 ஆசனங்களைக் கைப்பற்றக் கூடிய அணியாக இருக்கிறது. – என்றார்.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இடம்பெறவுள்ள நிலையில் அதனை கண்காணிப்பதற்காகப் பலர் விருப்பம் தெரிவித்த போதிலும் கொரோனா தடுப்பு நிலையின் கீழ் 14 நாள்கள் தனிமைப்படுத்தலில் இருக்கும் நடைமுறையால் பலரின் வருகை தடைப்படக்கூடும் என ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும் முதலாவது அணியினர் கடந்த 18ஆம் திகதி நாட்டுக்குள் வருகை தருவதாக அறிவித்திருந்தனர்.

இவ்வாறு வருகை தரும் முதலாவது அணியில் 4பேர் மட்டுமே வருகை தர இணங்கியமையோடு 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டு எதிர்வரும் முதலாம் திகதி முதல் கண்காணிப்பில் ஈடுபடவும் இணக்கம் காணப்பட்டது.

இதேபோன்று மேலும் ஓர் அணி தாய்லாந்தில் இருந்தும் வருகை தரும் எனக் கூறப்பட்ட நிலையில் நேற்று வருகை தரவிருந்த ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த நால்வரும் தமது பயணத்தை இரத்துச் செய்துள்ளனர்.

# கொரோனா நோயாளிகள் குறித்து உண்மையை மறைக்கின்றது அரசு

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 19

கொரோனா வைரஸ் தொடர்பான உண்மைகளை அரசு மறைக்கின்றது என ஜே.வி.பி. குற்றம்சாட்டியுள்ளது.

ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

கந்தக்காடு போதைப்பொருள் புனர்வாழ்வு நிலையத்தில் நோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டமையை அரசு வாக்கு வேட்டைக்காகப் பயன்படுத்துகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தேர்தலை நடத்தும் நோக்கம் காரணமாக சுகாதாரம் புறக்கணிக்கப்படுகின்றது. இதுவே நாட்டின் வீழ்ச்சிக்குக் காரணமாகயிருக்கலாம்,

அரசியல்வாதிகள் சுகாதாரத்தை ஆதிக்கம் செய்கின்றனர். இரண்டு நாள்களுக்கு முன்னர் கொரோனா நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என ஜயவர்த்தனபுர பல்கலைகழக ஆய்வுகூடத்தால் அறிவிக்கப்பட்டவர்களுக்கு நோய் பாதிப்பில்லை என அரசு அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸைத் தோற்கடித்த உலகின் முதல் நாடு இலங்கை எனக் காண்பிப்பதற்காக உண்மைகள் மறைக்கப்படுகின்றன – என்றார்.

## 20 வருடங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பத்தனைப் பகுதியில் நேற்று நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

வாக்கு என்பது உங்கள் உரிமை. அந்த வாக்குதான் ஆட்சியைத் தீர்மானிக்கப் போகின்றது. மக்களின் இறைமையே நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும். எனவே, அந்த உரிமையை எவரும் களவாடமுடியாது. முன்னர் கள்ள வாக்குப் போட்டவர்கள் இருந்தனர். சாராயத்துக்கும், சாப்பாட்டுக்கும் வாக்குகள் அளித்தவர்களும் இருந்தனர். இந்தக் காலம் தற்போது மலையேறிவிட்டது.

கள்வர்கள் மற்றும் கொள்ளையர்களும் நாடாளுமன்றம் தெரிவானதால் நல்லவர்களையும் மக்கள் திட்டினர். 225 பேருக்கும் இடிவிழ வேண்டும் எனவும் விமர்சித்தனர்.

சிலருக்கு அமைச்சுப் பதவி இல்லாவிட்டால் காலைக்கடனைக் கூட நிறைவேற்ற மனம் வராது. அவர்கள்தான் அந்தப் பக்கம், இந்தப் பக்கம் எனத் தாவுகின்றனர். நாளை எந்தப் பக்கம் தாவுவார்கள் எனவும் தெரியாது. எமது பக்கத்திலும் சிலர் இருக்கின்றனர். உங்கள் புள்ளடி மூலம் அவர்களுக்குச் சிறந்த பதிலடியைக் கொடுக்க வேண்டும். இதனால்தான் மஹிந்த ராஜபக்ஷவை விட்டுச் சென்றவர்களுக்கு வாக்களிக்கக் கூடாது என பிரசன்ன ரணதுங்க கூடக் கூறுகின்றார். சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளுக்கு முடிவு கட்ட வேண்டும்.

தற்போது பருவகாலக் குருவிகள் வருகின்றன. அழகாக இருக்கின்றன. ஆனால், எதிர்வரும் 5 ஆம் திகதி பறந்து விடும். ஆனால், இந்த வீட்டுக்குருவி உங்களுடன்தான் இருக்கும். வாக்குகளை வாங்கிக்கொண்டு தவளைகள்போல் தாவவில்லை. பதவிகள் பறிக்கப்பட்ட போதுகூட மஹிந்தவுடனேயே இருந்தேன் – என்றார்.

## 208 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
190 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த முறைப்பாடுகளுக்கு அமைய 60 வாகனங்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலங்களில் மாத்திரம் தேர்தல் விதிமுறை மீறல் தொடர்பில் 10 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இதேவேளை, இதுவரையான காலப்பகுதியில் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 3,684 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனத் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## அதிகளவான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பணிப்புரையை விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலை அடுத்து அறிவிக்கப்பட்டுள்ள, சுகாதார வழிகாட்டு முறைகளுக்கு அமைவாக, 50 பக்தர்கள் மட்டுமே, ஆலயத் திருவிழாவில் பங்கேற்க முடியும்.

நல்லூர் கந்தன் ஆலய திருவிழாவில் வழக்கமாக இலட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பது வழக்கம் என்றபோதும், கொரோனா தொற்று அச்சம் மற்றும், தனிமைப்படுத்தல் சட்டவிதிகளின் காரணமாக அதிகளவானோர் பங்கேற்க முடியாத நிலை காணப்பட்டது.

இதனையடுத்து, ஆலய நிர்வாகிகள் மற்றும் ஆலயக் குருமாருடன் திருவிழாவை நடத்த முடிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில், நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழாவில் குறைந்தளவிலாவது பக்தர்களை ஆலய வளாகத்துக்குள் அனுமதிக்கவேண்டும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்தக் கோரிக்கையைக் கவனத்தில் எடுத்துக் கொண்ட பிரதமர், சுகாதார வழிமுறைகளை பின்பற்றி, அதிகளவு பக்தர்கள் திருவிழாவில் பங்கேற்ற வழிசெய்யுமாறு இராணுவத் தளபதிக்கு பணிப்புரை விடுத்துள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன

## புலிகள் போன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆகவேண்டும். இல்லையேல் சர்வதேசம் அடுத்தகட்ட நடவடிக்கைளை எடுக்கும்' என்று திருகோணமலையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்திருந்தார். அதற்குப் பதிலளிக்கும்போதே வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தனிநாடு கோரி போரிட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் ஒரு கட்டத்தில் சில சர்வதேச நாடுகளின் ஆதரவைப் பெற்று இலங்கை அரசுக்கு சவால் விட்டனர். ஆனால், இறுதியில் அவர்கள் அழிந்தே போனார்கள்.

தற்போது தமிழீழ விடுதலைப்புலிகள் பாணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் சர்வதேச ஆதரவுடன் அரசியல் தீர்வு தொடர்பில் எமக்கு எச்சரிக்கை விடுக்கின்றனர். அதுவும் தேர்தல் காலங்களில் கூட்டமைப்பினரின் பேச்சுகள் நாட்டின் இறையாண்மைக்கு எதிராகவே இருக்கின்றன.

தீர்வை ஒருபோதும் சர்வதேசம் பெற்றுத்தராது என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் தமிழ் மக்களும் கவனத்தில்கொள்ள வேண்டும்.

அரசுடன் ஒன்றித்துப் பயணித்தால்தான் நாட்டின் இறையாண்மைக்குப் பாதகம் இல்லாத வகையில் – மூவின மக்களின் இன நல்லிணக்கத்துக்குக் குந்தகம் ஏற்படாத வகையில் – தீர்வைக் காண முடியும்.

அதைவிடுத்து தனிவழியில் தமிழர் தரப்பினர் சென்றால் நாம் என்ன செய்ய முடியும்?– என்று அவர் கேள்வி எழுப்பினார்.

ஒன்றுபட்ட - பிளவுபடாத இலங்கைக்குள்

# வடக்கு – கிழக்குக்கு தன்னாட்சி உரிமை

## கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வலியுறுத்தல்




யாழ்ப்பாணம், ஜூலை 19

தனித்துவமான மக்களாகவும், தேசிய இனமாகவும் நாம் எமது வரலாற்று ரீதியான வாழ்விடங்கள் தொடர்பிலும், எமக்குரிய எமது ஒருமித்த உரிமைகள் தொடர்பிலும், மேலும் எமது தலைவிதியை அல்லது எதிர்காலத்தை நாமே தீர்மானிப்பதற்கு எமக்கிருக்கும் உரிமை தொடர்பிலும், அதை உறுதிப்படுத்த ஒன்றுபட்டதும், பிளவுபடாததுமான இலங்கைக்குள் தமிழ் பேசும் மக்கள் வாழும் வடக்கு - கிழக்கில் தக்க தன்னாட்சி முறைமை ஒன்றை நடை முறைப்படுத்துவது தொடர்பிலும் திடசங்கற்பம் கொண்டிருக்கின்றோம்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று வெளியிட்டு வைக்கப்பட்டது.

யாழ். மார்ட்டின் வீதியிலுள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைமையகத்தில் இந்த நிகழ்வு நடந்தது.

தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, கூட்டமைப்பின் வேட்பாளர்களான த. சித்தார்த்தன், எம்.ஏ. சுமந்திரன், சி. சிறிதரன், ஈ. சரவணபவன், இ. ஆர்னல்ட், பா. கஜதீபன், சசிகலா ரவிராஜ், சுரேந்திரன் குருசுவாமி, வே. தபேந்திரன் ஆகியோர் பங்கேற்றனர்.

(விஞ்ஞாபனத்தின் முழு விவரம் 06ஆம், 07ஆம், 08ஆம் பக்கத்தில்)

# 'தமிழ்த் தேசியத்தில் தீவகத்தின் வகிபாகம்': ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா சிறப்புரை



(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்பாணம், ஜூலை 19

'தமிழ்த் தேசியத்தில் தீவகத்தின் வகிபாகம்' எனும் தலைப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்துரை கூட்டம் நேற்று கந்தர்மடத்தில் இடம்பெற்றது.



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் ஜனாதிபதி சட்டத்தரணி கே. வி. தவராசா சிறப்புரையாற்றினார்.



இந் நிகழ்வில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ் வேட்பாளர்களான ஈஸ்வரபாதம் சரவணபவன், இமானுவேல் ஆனோல்ட், வடக்கு மாகாண சபை முன்னாள் அவைத்தலைவர் சீ.வி.கே.சிவஞானம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான விந்தன் கனகரட்ணம், வலி. கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சுகிர்தன், கட்சி அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30. கல்லூரி வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# எதிர்காலம் கேள்விக்குறி!

தேர்தல் கள அரசியல், கட்சிகளையும் தரப்புகளையும் தங்களுக்குள் முட்டி மோதி, பிளவுற வைத்திருக்கின்றமை கண்கூடு.

1948 இல் இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் முதல் தென்னிலங்கையில் இரண்டு பிரதான சிங்களக் கட்சிகளே இருந்தன. ஒன்று – ஐக்கிய தேசியக் கட்சி. மற்றது – சிறிலங்கா சுதந்திரக் கட்சி.

இவை இரண்டுமே இந்த நாட்டில் மாறி மாறி ஆட்சிப் பீடம் ஏறின.

கடந்த நவம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தலுடன் நிலைமை மாறியது. இவை இரண்டையுமே முன்னிலைப்படுத்தாத மூன்றாவது தரப்பு – பொதுஜன பெரமுன – மொட்டுக் கட்சி – ஆட்சி அதிகாரத்துக்கு வந்திருக்கின்றது.

பழைய நீண்ட கால செல்நெறி இப்போது மாறிவிட்டது.

இரண்டு பிரதான கட்சிகளுமே இன்று 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலையில்'.

ஒரு காலத்தில் ஆட்சியை அமைத்த – தீர்மானித்த – இரண்டு கட்சிகளும் வரப்போகும் தேர்தலில் ஓரிரு டசின் ஆசனங்களையாவது கைப்பற்றுமா என்பதே கேள்விக்குறியாகிவிட்டது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி சிதைந்து போக, பொதுஜன பெரமுன துளிர்த்து, காலூன்றி, பலமாக விருட்சம் போன்று விஸ்வரூபம் எடுத்து நிற்கின்றது.

அது போன்ற நிலைமைதான் ஐக்கிய தேசியக் கட்சியிலும். அங்கும் 'உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதை'தான். அக்கட்சி மாத்திரம் பிளவுறவில்லை. அக்கட்சியுடன் கூட்டு வைத்திருந்த கூட்டுக் கட்சிகள் பலவும் ஐக்கிய தேசியக் கட்சியை விட்டுப் பிரிந்து சென்று ஐக்கிய மக்கள் சக்தியை ஸ்தாபித்துள்ளன.

முன்னைய பிரதான கட்சிகளான சு.கவும், ஐ.தே.கவும் இன்று சேடம் இழுக்கும் நிலையிலேயே உள்ளன. வரப்போகின்ற தேர்தல்களின் முடிவுகள் அதனைத் துலாம்பரப்படுத்தும் என்று எதிர்பார்க்கலாம்.

தமிழ்த் தரப்பையும் கூட தேர்தல் அரசியல் பிளவுற்று சிதைத்திருக்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆரம்பம் தொட்டு – 1948 இல் இலங்கை சுதந்திரம் அடைந்தமை முதல் – தமிழர் தரப்பு இரண்டு பிரதான கட்சிகளுக்கு இடையில்தான் பிரிந்து நின்றது. ஒன்று – அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ். அடுத்தது – இலங்கைத் தமிழரசுக் கட்சி.

தமிழருக்கு எதிராக பௌத்த, சிங்களப் பேரினவாத அரசுகளின் மேலாண்மை அடக்குமுறை உச்சத்தைத் தொட்டு, இலங்கையில் தமிழினத்தின் இருப்புக்கே நெருக்கடி என்ற இக்கட்டு நிலைமை தீவிரமடைந்த போது இந்த இரண்டு பிரதான கட்சிகளும் தங்களுக்குள் இருந்த வேறுபாடுகளைத் துறந்து, இன மீட்சிக்காக ஒன்றிணைந்தன. தமிழர் விடுதலைக் கூட்டணி உருவான சுருக்க வரலாறு இது.

சுமார் 44 ஆண்டுகளுக்குப் பிறகு அது போன்ற உச்ச நெருக்கடியை மீண்டும் தமிழினம் எதிர்கொள்ளக் கூடிய ஆபத்து ஏது நிலைகள் சூழ்ந்து வருகின்றன.

ஆனால் அப்போதைய நிலைமைக்கு மாறாக – 44 ஆண்டுகளுக்கு முன்னர் அப்போதிருந்த தமிழ்த் தலைவர்கள் தமது தீர்க்கதரிசனமான சிந்தனையை முன்னிறுத்தி, தமக்குள்ளான குறுகிய அரசியல் வேறுபாடுகளைக் களைந்து, ஒன்றிணைந்தமைக்கு மாறாக – இப்போதைய தமிழ்த் தலைமைகள் மென்மேலும் பிளவுபட்டுத் தமிழினத்தைச் சிதறடித்து வைத்திருக்கின்றன.

தமிழ்க் கூட்டமைப்பில் மூன்று கட்சிகள் கூட்டிணைந்துள்ளன என்கின்றனர்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஐந்து கட்சிகளின் இணைவு என்கின்றனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிலும் அகில இங்கைத் தமிழ்க் காங்கிரஸ் உட்பட பல அமைப்புகள் சேர்ந்துள்ளன என்கின்றனர்.

தவிரவும், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளிகளின் பெயரில் மூன்று அமைப்புகள். முதலில் தொடங்கிய ஜனநாயகப் போராளிகள் மட்டும் கூட்டமைப்புடன்.

தவிரவும், ஈரோஸின் பெயரில் இரண்டு தரப்புகள். வரதராஜப்பெருமாள் தரப்புக் கட்சி வேறு.

போதாக்குறைக்கு தமிழ்த் தேசியப் பரப்புக்கு வெளியில் கொள்கைப் போக்குக் கொண்ட தமிழ்க் கட்சிகள், தென்னிலங்கை சிங்களக் கட்சிகளின் உள்ளூர் முகவர்கள் என்று பல தரப்புகள்.

இப்படி பிளவுண்டு, சிதறுண்டு நிற்கின்றது தமிழினம்.

இப்போது நடைபெறப் போகின்ற நாடாளுமன்றத் தேர்தல் தென்னிலங்கையில் பௌத்த, சிங்கள பேரினவாத சக்திகளை அதிகாரத்தின் உச்சத்துக்கு – உச்சிக்கு – கொண்டு போகப் போகின்றது என்பது நிச்சயம்.

அது, 1972இலும், 1978இலும் தமிழர் தரப்பின் நிலைப்பாடுகளை உள்வாங்காமல், தமிழருக்கும் சேர்த்து அரசமைப்புகளை தம் பாட்டில் உருவாக்கி நம் தலைமீது கட்டி அடித்த மாதிரி, இப்போதும் 13ஆவது திருத்த ஏற்பாடுகளையும் கூட நீக்கிய, மிக மோசனமான பௌத்த, சிங்களப் மேலாதிக்க அரசமைப்பு ஒன்று நம் மீது புதிய அரசினால் வல்வந்தமாகத் திணிக்கப்படக் கூடிய பேராபத்தைத் தரலாம்.

பிரிந்து, பிளவுண்டு, சிதறுண்டு நிற்கும் தமிழினம் அந்தப் பேராபத்தை எப்படி எதிர்கொள்ளப் போகின்றது? நம் எதிர்காலம் கேள்விக்குறிதான்.

மார்ச் முதலாம் திகதியே நாட்டை 'லொக் டவுன்' செய்து

# கொரோனா வைரஸ் தொற்றாளர்களை 300 இற்குள் கட்டுப்படுத்தியிருக்கலாம்

## அரசியல் இலாபம் கருதி அதை அரசு செய்யவில்லை என மனோ குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 19

வெளிநாட்டுக் கதை எதுவும் வேண்டாம். இந்த நாடு ஒரு தீவு என்பதால் எமக்கு இயற்கை பாதுகாப்பு கிடைத்தது. அதனால் தான், கொரோனா நோயாளர் தொகை 3 ஆயிரத்துக்குள் நிற்கின்றது. ஆனால், நாட்டை முன்கூட்டியே மூடி 'லொக் டவுன்' செய்து 3 ஆயிரம் கொரோனா நோயாளர்களை 300 இற்குள் நிறுத்தி இருக்கலாம்.

- இவ்வாறு முன்னாள் தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

நீங்கள் மார்ச் 19ஆம் திகதி தேர்தல் வேட்புமனு இறுதித் தினம் வரை, அதாவது பிரதான எதிர்க்கட்சி உடைவது உறுதியாகும் வரை, அரசியல் இலாபத்தை மனதில் கொண்டு, நாட்டை திறந்து வைத்தீர்கள். இதனால்தான் முழு நாடும் இன்று பாடுபடுகின்றது எனவும் அரசிடம் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தனியார் தொலைக்காட்சியில் நேற்று முன்தினம் இரவு பிரபல சிங்கள மொழி அரசியல் விவாத நிகழ்வு நடைபெற்றது. ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் மனோ கணேசன், அளவதுவள, அரசு தரப்பில் அருந்திக பெர்னாண்டோ, காஞ்சன விஜயசேகர ஆகிய முன்னாள் எம்.பிக்கள் கலந்துகொண்டு கடும் காரசாரமாக விவாதித்த இந்த நிகழ்வில் முன்னாள் எம்.பி. மனோ கணேசன் மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதி, மார்ச் 2ஆம் திகதியன்று நாடாளுமன்றத்தைக் கலைத்து, வேட்புமனு மற்றும் தேர்தல் திகதிகளை அறிவித்தார். இதற்குப் பதில் அவர் நாடாளுமன்றத்தை ஒத்திவைத்து விட்டு, முழு நாட்டையும் கொரோனாவை எதிர்த்துப் போராடும் தயார் நிலைக்குக் கொண்டு சென்று இருக்கலாம். இதை அவர் செய்யவில்லை.

பொறுப்பற்ற நிலையில் வேட்புமனு மற்றும் தேர்தல் திகதிகளை அறிவித்ததால், நாடு திறந்த நிலையில் இருந்தது. கட்சிகளின் இலட்சக்கணக்கான ஆதரவாளர்கள் நாடு முழுக்க ஆங்காங்கே கட்சி அலுவலகங்களில் கூடினார்கள். அதற்கிடையில் கொழும்பில் பல்லாயிரக்கணக்கானோர் கூடும் றோயல் - தோமியன், ஆனந்த - நாலந்த கல்லூரிகளின் இறுதிப்போட்டிகளையும் நடத்த விட்டு, அதில் ஜனாதிபதி மற்றும் அரசியல் பிரமுகர்கள் கலந்துகொண்டு கொரோனாவை வளரவிட்டீர்கள். வேட்புமனு முடிந்த மறுநாளே, அதாவது 20ஆம் திகதியே நாட்டை 'லொக்டவுன்' செய்தீர்கள். அதாவது வரும் ஆபத்து பற்றி தெரிந்து கொண்டே, அரசியல் இலாபம் கருதி செயற்பட்டீர்கள்.

பெப்ரவரி மாதம் 25ஆம் திகதியும், மார்ச் மாதம் 5ஆம் திகதியும் என இரண்டு முறை அன்றைய எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில், கொரோனா ஆபத்து பற்றி கேள்வி எழுப்பி, உரை நிகழ்த்தினார். அப்போது நாடு கொரோனா பற்றி அறிந்திருக்கவில்லை. ஆனால், சஜித் சபையில் பிரதமரையும், சுகாதார அமைச்சரையும் இதுபற்றி எச்சரிக்கை செய்தார். நாட்டை மூடி, விமான நிலையங்களை மூடி நாட்டை தயார் நிலையில் வைக்கச் சொன்னார். நீங்கள் சபையில் அவரைக் கிண்டல் செய்தீர்கள். அவர் சொன்னதைக் கணக்கில் எடுக்கவில்லை.

இன்று கொரோனா ஒரு சுகாதாரப் பிரச்சினை மட்டும் இல்லை. அது வீட்டுப் பொருளாதாரத்தையும், நாட்டுப் பொருளாதாரத்தையும் நாசமாக்கி விட்டது. நோயில் இறந்து, நோயால் சுகவீனமடைந்து, வருமானம் இழந்து, தொழில்கள் நலிவடைந்து, குடும்ப நிகழ்வுகளைக் கூட நடத்த முடியாமல் தவிக்கும் அனைவருக்கும் நீங்கள் பொறுப்பு கூற வேண்டும். இனி கொரோனா இரண்டாம் அலை வந்தால் நிலைமை மோசமடையும். அதற்கும் நீங்கள் பொறுப்புக்கூற வேண்டும்.

இங்கே நான் அர்ப்பணிப்புடன் செயற்படும் சுகாதாரத்துறையினரைக் குறை கூறவில்லை. இந்த நிலையிலும் பொறுப்புடனும், தியாக உணர்வுடனும் செயற்படும் சுகாதார, இராணுவ, பொலிஸ் அதிகாரிகளை நாம் மனதாரப் பாராட்டுகின்றோம். அவர்களுக்கு வேண்டிய தேவைகளைக்கூட நீங்கள் ஒழுங்காக நிறைவேற்றவில்லை. மார்ச் முதலாம் திகதியன்றே நாட்டை 'லொக் டவுன்' செய்யாமல் திறந்து வைத்து, அரசியல் இலாபத்தை மனதில்கொண்டு இங்கே பொறுப்பற்று செயற்பட்டது, உங்கள் அரசு தான். இதை வரலாறு பதிவு செய்யும் - என்றார்.

# மூன்று நாடுகளில் சிக்கியிருந்த இலங்கையர்கள் 100 பேர் வருகை

வெளிநாடுகளில் சிக்கியிருந்த இலங்கையர்கள் 100 பேர், மூன்று நாடுகளிலிருந்து கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

சீனா, ஐக்கிய அரபு இராச்சியம், கட்டார் ஆகிய நாடுகளிலிருந்து நேற்று அதிகாலையும், நேற்றுமுன்தினம் இரவும் அவர்கள் இவ்வாறு வருகை தந்துள்ளனர்.

அவர்கள் அனைவருக்கும் தனியார் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையைத் தொடர்ந்து, தனிமைப்படுத்தலுக்காக சுற்றுலா ஹோட்டல்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

குறித்த பி.சி.ஆர். கட்டணம் உள்ளிட்ட, இவ்வாறு அவர்கள் தனிமைப்படுத்தல் காலத்தில் தங்கியிருக்கும் சுற்றுலா ஹோட்டல்களுக்கான கட்டணமும், அவர்களது விமானச்சீட்டுக்கான கட்டணத்துடன் சேர்த்து அறவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது அரசால் நடத்திச் செல்லப்படும் 72 தனிமைப்படுத்தல் நிலையங்களில், உச்சபட்ச அளவில் தனிமைப்படுத்தப்படுவோர் காணப்படுவதால், வெளிநாடுகளிலிருந்து இலங்கையர்களை அழைத்து வருவதற்கான நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், வெளிநாடுகளிலிருந்து தற்போது வந்துள்ள 100 பேரும் சுற்றுலா ஹோட்டல்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு - மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் - 076 443 8622

# சு.க. தலைவர் பதவியை ஏற்கும் எண்ணம் மஹிந்தருக்கு இல்லை

## அவரே நிலைமையைத் தெளிவுபடுத்துகிறார்

யாழ்ப்பாணம், ஜூலை 18

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை மீண்டும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற எந்த எண்ணமும் தனக்கில்லை எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் பெற்றுக்கொள்வார் என அந்த கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்த கருத்துக்குப் பதிலளிக்கும் போதே பிரதமர் இதனை கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து விலக தயாராக இருப்பதால், அந்த பதவியை மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் பொறுபேற்பார் என அண்மையில் தகவல் வெளியாகி இருந்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து விலகிய பின்னர் பல கஷ்டங்கள் மற்றும் சவால்களுக்கு மத்தியில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை உருவாக்கி, அதன் தலைமைத்துவத்தை தான் பெற்றுக்கொண்டுள்ளார் எனவும், தற்போது அந்தக் கட்சியின் தலைவர் என்பதால் மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பொறுபேற்கும் எந்தத் தேவையுமில்லை எனவும் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

## பாடசாலைகளின் விடுமுறை நீடிப்பு

கொழும்பு, ஜூலை 18

அனைத்து அரச பாடசாலைகளுக்கும் நாளைமறுதினம் தொடக்கம் மற்றொரு வாரம் இடைக்காலத் தவணை விடுமுறை கல்வி அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் ஜூலை 20ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் ஜூலை 24ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்படுவதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டில் கோரோனா தொற்று அச்சநிலை மக்கள் மத்தியில் தொடர்வதால் இந்த விடுமுறையைக் கல்வி அமைச்சு வழங்கியுள்ளது.

# புலிகளால் அழிவடைந்த வடக்கை கட்டியெழுப்புகின்றதாம் முப்படை!

## பெருமையடைகிறார் இராணுவத் தளபதி

யாழ்ப்பாணம், ஜூலை 18

விடுதலைப்புலிகளால் அழிவடைந்த வடக்கை முப்படையினரின் அர்ப்பணிப்புடன் மீளக்கட்டி எழுப்பி வருவதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இன்று புங்குடுதீவில் ராணுவத்தினரால் அமைக்கப்பட்ட வீட்டுத் திட்டத்தைத் திறந்துவைத்த பின் உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தற்போது இலங்கையில் கொரோனா நோய் முற்றாக நீங்கி விடவில்லை.

நான் வடக்கு மக்களுக்கு ஒரு கோரிக்கையை முன்வைக்க விரும்புகின்றேன். நீங்கள் சுகாதார அமைச்சினால் வெளியிடப்படும் சுகாதார நடைமுறைகளைக் கட்டாயமாக பின்பற்றவேண்டும். அதிலும் குறிப்பாக நீங்கள் முகக்கவசம் அணிந்து கட்டாயம் வீதிகளில் பயணிக்க வேண்டும்.

அதேபோல் நீங்கள் கைகளை நன்றாகக் கழுவி உங்களுடைய சுகாதார நடைமுறைகளைப் பேணுவது அவசியமாகும். ஏனெனில் இலங்கை யில் இருந்து இன்னும் கொரோனா முற்றாக நீங்கவில்லை..

யுத்தம் முடிந்த பின்னர் வடக்கில் ராணுவத்தினரால் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசனம் போன்ற வேலைத் திட்டங்கள் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதேபோல் ராணுவம் மட்டுமல்ல முப்படையினரும் இணைந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கான வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம். வடக்கில் உள்ள அப்பாவி தமிழ் மக்களுக்காக ராணுவத்தினர் தற்போது வீதிகளில் இறங்கி வேலைகள் செய்வதை நீங்கள் பார்க்கக் கூடியதாக இருக்கும்.

அதேபோல் தான் ஒரு பெரிய சவாலாக அமைந்தது இந்த கொரோனா வைரஸ். அதைக் கூட நாம் முற்றுமுழுதாக இல்லாதொழிக்காவிட்டாலும் பூரண கட்டுப்பாட்டுக்குள் முப்படையினர் இணைந்து வைத்திருக்கின்றோம் - என்றார்.

# சஜித் அணியால் எதிர்க்கட்சி அந்தஸ்தையும் பெறமுடியாது

## எஸ்.பி. திஸநாயக்க கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 18

ஐக்கிய மக்கள் சக்திக்கு பிரதான எதிர்க்கட்சி பதவியைக்கூட பெறமுடியாத நிலை ஏற்படும் என்று ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

கொத்மலை பகுதியில் இன்று மாலை இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தின் பின் ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

குருநாகல் சம்பவம் தொடர்பில் எனக்குத் தெரியாது. ஆனால், தொல்பொருள் பெறுமதிமிக்க இடமொன்று உடைக்கப்பட்டிருக்குமானால் அது தவறு.

ஐக்கிய தேசியக் கட்சி புதுவழியை நோக்கிப் பயணிக்க முயற்சித்தாலும் அதற்குக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒருபோதும் இடமளிக்கமாட்டார்.

ஐக்கிய தேசியக்கட்சி இன்று இரண்டாகப் பிளவுபட்டுள்ளது. சஜித்துடன் 80 வீதமானோரும், ரணில் பக்கம் 20 வீத மானோரும் உள்ளனர். எனவே, ஐக்கிய தேசியக் கட்சியால் மீண்டெழ முடியாது.

அதேபோல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட எதிர்க்கட்சிகள் பெறும் ஆசனங்களைவிட, சஜித் அணி குறைவாகவே பெறும். பிரதான எதிர்க்கட்சி அந்தஸ்த்தைகூட பெறமுடியாமல் போகும்.

ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்துகொண்டு, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்களுக்கு வதை கொடுத்தனர். அப்படியானவர்கள் இன்று எம்பக்கம் வந்துள்ளனர். இதனால்தான் சிறு பிரச்சினை ஏற்பட்டுள்ளது - என்றார்.

# யாழ்.பல்கலை மாணவர்கள் தனியார் விடுதியில் மோதல்

## கத்திக்குத்தில் ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு இடையிலான கைகலப்பு கத்திக்குத்தில் முடிவடைந்ததில் மாணவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

தமிழ் மாணவர்களுக்கு இடையிலான கைகலப்பைத் தடுக்க முற்பட்ட சிங்கள மாணவரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பரமேஸ்வரா சந்திக்கு அண்மையில் உள்ள தனியார் வீடொன்றில் மாணவர்கள் தங்கும் விடுதியில் இந்தச் சம்பவம் நேற்றிரவு 11 மணியளவில் இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட தமிழ் மாணவர்கள் சிலர் கூடியிருந்த போது, அவர்களுக்கு இடையே கைகலப்பு ஏற்பட்டுள்ளது. அதில் மாணவன் ஒருவர் ஆத்திரமடைந்து மற்றொரு மாணவருக்கு கத்தியால் குத்த முற்பட்டுள்ளார்.

அதனை அவதானித்த சிங்கள மாணவர் ஒருவர் தடுக்க முற்பட்டபோது அவரது கழுத்தில் கத்திக்குத்து விழுந்தது. அவர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

விஞ்ஞானபீட இறுதி ஆண்டு பரீட்சைகள் நடைபெறும் நிலையில் வெளிமாவட்டங்களில் இருந்து தங்கியிருந்தவர்களே இவ்வாறு கைகலப்பில் ஈடுபட்டனர். அவர்களுக்கு இன்றும் பரீட்சை நடைபெறுகின்றது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

கத்தியால் குத்தினார் என்ற குற்றச்சாட்டில் மாணவர் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

# மன்னார் வீடொன்றின் மீது நேற்று குண்டுத் தாக்குதல்

## குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம்

மன்னார், ஜூலை 18

மன்னார் பட்டித்தோட்டம் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீது நேற்று வெள்ளிக்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம் அடைந்து மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான செபமாலை சந்தியோகு (வயது - 56) என்ற குடும்பஸ்தரே படுகாயம் அடைந்த நிலையில் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை அவரது மகனுடன் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த சில இளைஞர்கள் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையில் இரவு அந்தப் பகுதிக்கு வந்த சில இளைஞர்கள் வீட்டின் வெளிப் பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி கமெராக்களை உடைத்துள்ளனர்.

பின்னர் வீட்டின் முன் பகுதிக்கு வந்து இரவு 9.45 மணியளவில் மதில் மேலாக நாட்டுக் குண்டு ஒன்றை வீட்டு வளாகத்தினுள் எறிந்துள்ளனர். இதன்போது அந்தக் குண்டு பாரிய சத்தத்து டன்வெடித்ததில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான செபமாலை சந்தியோகு படுகாயமடைந்த நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து நேற்று இரவு பொலிஸார் அந்த வீட்டுக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டதோடு, இன்று காலை விசேட தடயவியல் பொலிஸார் மற்றும் மன்னார் பொலிஸ் நிலைய பொலிஸார் அந்த வீட்டுக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற தேர்தல் விஞ்ஞாபனம்

### 1. வரலாற்றுப் பின்னணி

அந்நியர் ஆட்சியிலிருந்து 1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்ற போது சாதாரண பெரும்பான்மை ஆட்சி முறையிலான ஒற்றையாட்சி அரசியலமைப்பு முறையொன்று இங்கு பலவந்தமாகத் திணிக்கப்பட்டது. 1949 ஆம் ஆண்டில் இந்திய வம்சாவளித் தமிழர்களில் கணிசமான எண்ணிக்கையிலானோரின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. இச் சமகாலத்திலேயே அரச ஆதரவுடன் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில், குறிப்பாக கிழக்கு மாகாணத்தில், பெரும்பான்மை இனத்தவர்களைக் குடியேற்றும் திட்டங்கள் தீவிரமடைந்தன. இச்செயற்பாடுகளை எதிர்த்தனால் ஏற்பட்ட அரசியல் எழுச்சி காரணமாக 1949 டிசெம்பர் மாதத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தோற்றம் பெற்றது.

1951 ஏப்ரல் மாதத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 'தமிழ் மக்கள் ஒரு தேசிய இனத்திற்குரிய அனைத்து அம்சங்களையும் கொண்டவர்கள் என்பதால் தமிழர் ஒரு தனித்துவமான தேசிய இனமெனவும், அந்த அடிப்படையில் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள்' என்கின்ற தனது அரசியற்கோட்பாட்டினை முன்வைத்தது. இந்த உரிமையை செயற்படுத்தவென தமிழ்பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு - கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான தன்னாட்சி ஏற்பாடொன்றை இலங்கைத் தமிழரசுக் கட்சி கோரிநின்றது.

தமிழ் மக்களின் சம்மதமின்றி நிறைவேற்றப்பட்ட முதலாம் மற்றும் இரண்டாம் குடியரசு யாப்புக்கள் இரண்டுமே ஒற்றையாட்சி அரசமைப்பை உறுதிப்படுத்தியதுடன் சிங்கள மொழியினை மாத்திரமே ஒரே அரச கரும மொழியாகக் கொண்டு செயற்படவும்; தொடர்ந்தும் பௌத்த மதத்திற்கு முதன்மையான இடத்தை வழங்கவும் வழிவகுத்திருந்தன. 1948ல் இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து தமிழ் மக்களின் வரலாற்று வாழ்விடமாகிய வடக்கு - கிழக்கின் இன விகிதாசாரத்தை மாற்றியமைக்கும் முனைப்புடன் திட்டமிட்ட அரச ஆதரவுச் சிங்களக் குடியேற்றங்கள் நடைபெற்றன. 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுற்ற பின்னர் வடக்கு - கிழக்கில் இது முழு முனைப்புடன் தொடர்ந்தது.

1956, 1958, 1961, 1977, 1981 மற்றும் 1983 ஆகிய ஆண்டுகளிலும், அதனைத் தொடர்ந்து தொடர்ச்சியாகவும் தமிழ் மக்களுக்கெதிரான திட்டமிட்ட வன்முறை, இனக் கலவரங்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டது. அரசு எவ்வித பாதுகாப்பையும் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு வழங்கவில்லை. இச் சந்தர்ப்பங்களில் நாட்டின் ஏனைய பாகங்களில் பாதிக்கப்பட்ட தமிழர்கள் நிலம், கடல் மற்றும் வான் வழியாக வடக்குக் கிழக்கிற்கு அன்றைய அரசாங்கங்களினால் அனுப்பி வைக்கப்பட்டனர். இதன் மூலம் இவ்விரு மாகாணங்களையும்; தமிழர் தம் தாயகமாகவும் அங்குதான் தமிழர்களுக்கு பாதுகாப்பு உண்டு எனவும் அரசாங்கமே ஏற்றுக்கொண்டது. ஆனால் தற்போது வடக்கு கிழக்கிலும் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பதே நிலைமை.

### 2. அரசியல் தீர்வு

தமிழ் அரசியல் தலைமையானது தமிழ் பேசும் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு; பெருமளவு தன்னாட்சி அதிகாரத்தினை வழங்கும் ஒரு மாற்று அரசியல் ஏற்பாட்டினை பெற காலங்காலமாக பல முறை முயற்சி செய்தது. அடுத்தடுத்து ஆட்சி செய்த அரசாங்கங்களுடன் பல முயற்சிகளில் ஈடுபட்டிருந்தாலும் தேசிய இனப்பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படாதிருக்கின்றது. 2002 பெப்ரவரி மாதம் தமிழீழ விடுதலைப் புலிகளும் அன்றைய இலங்கை அரசாங்கமும் போர் நிறுத்த ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டதோடு, 2002 டிசம்பரில் ஏற்பட்ட 'ஒஸ்லோ' உடன்படிக்கையில் சில அடிப்படைக் கோட்பாடுகளின் மீது இணக்கம் கண்டன. அக் கோட்பாடு பின்வருமாறு அமைந்தது.

'ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடப் பகுதிகளில் உள்ளக சுயநிர்ணய உரிமைக் கொள்கையின் பிரகாரம் சமஷ்டிக் கட்டமைப்பின் அடிப்படையிலமைந்த தீர்வொன்றை ஆராய்தல்.'

சர்வதேச நியமங்களின் படியும், சர்வதேச சாசனங்களின் பிரகாரமும் தமிழர்களாகிய நாங்கள் தனிச் சிறப்புமிக்க மக்கள் குழாமாவோம். ஒரு மக்கள் குழாமான நாங்கள் பேரினவாதத்தின் பிடிக்கு ஆட்படாது கௌரவத்துடனும் சுயமரியாதையுடனும், சுதந்திரமாகவும், அச்சமின்றியும், நாட்டின் ஏனைய மக்களுடன் சமத்துவமுள்ள மக்களாக வாழ விரும்புகின்றோம்.

இதனால், தனித்துவமான மக்களாகவும், தேசிய இனமாகவும் நாம் எமது வரலாற்று ரீதியான வாழ்விடங்கள் தொடர்பிலும், எமக்குரிய எமது ஒருமித்த உரிமைகள் தொடர்பிலும், மேலும் எமது தலைவிதியை அல்லது எதிர்காலத்தை நாமே தீர்மானிப்பதற்கு எமக்கிருக்கும் உரிமை தொடர்பிலும், அதை உறுதிப்படுத்த ஒன்றுபட்டதும், பிளவுபடாததுமான இலங்கைக்குள் தமிழ் பேசும் மக்கள் வாழும் வடக்கு - கிழக்கில் தக்க தன்னாட்சி முறைமை ஒன்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் திடசங்கற்பம் கொண்டிருக்கின்றோம்.

இவை தொடர்பிலான தற்போதைய அரசியலமைப்பு ஏற்பாடுகள் பொருத்தமற்றனவாகவும், திருப்தியற்றனவாகவும் அமைந்துள்ளன. தற்போதுள்ள ஏற்பாடுகள் பெரும்பான்மை மக்களுக்குச் சார்பானதாகவும், அவர்களது ஆதிக்கத்தை தமிழர் மீது திணிக்கும் வகையிலுமே அமைந்துள்ளன. நீதி, சமத்துவம், சமாதானம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்தும் ஓர் அரசியலமைப்புக் கட்டமைப்பின்றி பல்லின சமூகமொன்றில் ஜனநாயகம் செயற்பட முடியாது.

மஹிந்த ராஜபக்ஷச ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இலங்கை அரசாங்கம் இந்திய அரசாங்கத்திடம் '13 ஆம் திருத்தச் சட்டத்தினை முழுமையாக அமுல்படுத்தி அதற்கு மேலாக அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வினை கட்டியெழுப்பும்' என தொடர்ந்து உறுதிமொழியளித்தது. இவ் வாக்குறுதிகளுக்கமைய 13 மார்ச் 2015ல் இந்திய பிரதமர் இலங்கை நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதுபின்வருமாறு கூறினார்.

'எமது சமூகத்திலுள்ள அனைத்து பாகங்களின் அபிலாஷைகளுக்கு நாம் மதிப்பளிக்கும் போது, எம் நாட்டின் ஒவ்வொரு பிரஜையின் சக்தியையும் எமது நாடு உள்வாங்கிக்கிக்கொள்ளும். மாநிலங்கள், மாவட்டங்கள் மற்றும் கிராமங்களை இவ்வாறு வலுவூட்டப்படும் பொழுது நாடுமென்மேலும் மேம்படும்.

கூட்டுறவு சமஷ்டியில் நான் திடமான நம்பிக்கை கொண்டவன்' என்பதையும் குறிப்பிட்டார்.

இறையாண்மை என்பது மக்களிடமே உண்டு, அரசிடம் அல்ல எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாக வலியுறுத்துகின்றது. தமிழ் மக்களை ஆளுகின்ற உரிமை கொழும்பிலிருக்கும் அரசாங்கத்திடமல்ல, தமிழ் மக்களிடமே பொதிந்திருக்கின்றது. இதனடிப்படையில், மத்திய அரசிடமும் அதன் முகவரான ஆளுநரிடமும் அதிகாரங்களைக் குவிக்கின்ற 13 ஆம் திருத்தச் சட்டம் முற்றிலும் பிழையானதொன்று. ஏதேச்சாதிகார அரசிற்கு விடுக்கும் அடிப்படை ஜனநாயகச் சவாலின் மீதே எமது அரசியல் சித்தாந்தம் வேரூன்றி நிற்கின்றது. இந்த நோக்கம் நாடளாவிய ரீதியில் செயற்படுவதற்கென நாம் கடந்த 2015 ஜனவரி 8 இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் எமது மாபெரும் பங்களிப்பை வழங்கியிருந்தோம். ஆகவே, எமது அரசியலானது அனைத்து மக்களதும் தேவைகள் மற்றும் அரசியலபிலாஷைகளோடும் தமிழ் பேசும் மக்களது நீதி மற்றும் சமத்துவத்திற்கான போராட்டத்துடனும் பின்னிப்பிணைந்துள்ளது.

இந்த பின்புலத்திலேயே நாம் எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலை எதிர்கொள்கின்றோம்.

### 2.1 அரசியல் தீர்வு தொடர்பான எமது நிலைப்பாடு

ஒரு ஜனநாயகத்தில் அரசாங்கம் என்பது 'மக்களால் மக்களும் மக்களின் அரசாங்கமும் மக்களுக்கான அரசாங்கமும்' ஆகும். இந்த அடிப்படையில் மட்டுமே ஒரு பங்கேற்பு ஜனநாயகம் நிறுவப்பட்டு நிலைத்திருக்க முடியும். எனினும், தமிழ் பேசும் மக்கள் சிங்களவருடன் இணைத்து தமது இறையாண்மையை அனுபவிக்க அரசியலமைப்பு வழிவகைகளை வழங்கவில்லை. இந்த குறைபாட்டின் காரணமாக அவர்கள் அரசியல் அடிபணிதல், பொருளாதார மந்தநிலை மற்றும் கலாச்சார ஓரங்கட்டலுக்கு ஆளாகியுள்ளனர். நாம் இப் பாதகமான நிலைமையை ஒரு கூட்டு முயற்சியின் மூலம் மாற்றியமமைத்து, அரச முகவர்களின் சுரண்டல் மற்றும் அடக்குமுறைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு முனைவோம்.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமஷ்டிக் கொள்கைகளை உள்ளடக்கிய அரசியலமைப்பு ஏற்பாட்டின் மூலம் மட்டுமே இலங்கைத் தமிழர்கள் மற்றும் தீவின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வசிக்கும் ஏனைய தமிழ் பேசும் மக்களின் நியாயமான அபிலாஷைகளை பூர்த்தி செய்ய முடியும். உண்மையில் அத்தகைய ஏற்பாடு அம்மக்களை நிலைநிறுத்துவதற்கு இன்றியமையாததாகிவிட்டது. கடந்த முப்பது ஆண்டுகளில் வரையப்பட்ட நாடாளுமன்றத் தேர்வுக் குழுக்களின் பரிந்துரைகள் மற்றும் அவற்றை அடிப்படையாகக் கொண்ட அரசியலமைப்பு முன்மொழிவுகளை நோக்கும் போது, அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் ஓர் சமஷ்டி கட்டமைப்பை நோக்கி நகர்ந்துள்ளமை தென்படுகின்றது. இத்தகைய முன்மொழிவுகளின் அடிப்படையிலேயே அரசாங்கங்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. மேலும்எதிர்காலத்தில்வரவிருக்கும்எவ்விதசவால்களையும் பொருட்படுத்தாது நாங்கள் இம் முயற்சிகளை தொடர்ந்தும் முன்னெடுப்போம். தேசிய நல்லிணக்கத்தைக் கொண்டு வருவதற்கு நேர்மையான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்போதெல்லாம், அதற்கீடாக பரஸ்பரமாக செயற்பட நாம் கடமைப்பட்டுள்ளோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேசிய இனப் பிரச்சனைக்குத் தீர்வுகாண அத்தியாவசியமெனக் கருதும் கோட்பாடுகளும், பிரத்தியேக அரசியலமைப்பு ஏற்பாடுகளும் பிரதானமாக இத்தீவில் வாழும் பல்வேறு மக்களிடையே ஆட்சி அதிகாரங்களைப் பங்கிடுவதனூடாகப் பகிர்ந்த இறையாண்மையினை உறுதிப்படுத்தலைக் குறித்தது. உண்மையான நல்லிணக்கத்தையும், நீடித்து நிலைக்கும் சமாதானத்தையும், இலங்கை மக்கள் அனைவருக்கும் பொதுவான அபிவிருத்தியையும் எய்துவதற்குப் பின்வரும் அதிகாரப் பங்கீட்டு அடிப்படைகள் முக்கியம் பெறுகின்றன.

தமிழர்கள் தமக்கேயுரிய நாகரிகம், மொழி, கலாசாரம், மற்றும் பாரம்பரியத்தைக் கொண்ட தனித்துவமிக்க தேசிய இனமாவர். அத்துடன் நினைவுக்கெட்டாத காலம் முதல் தொன்று தொட்டே வாழ்ந்த தமிழ் மக்கள் சிங்கள மக்களுடனும் ஏனைய மக்களுடனும் இந்தத் தீவில் வாழ்ந்து வருகின்றனர்.

புவியியல் ரீதியாகப் பிணைக்கப்பட்டுள்ளதும், தமிழ் பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டதுமான வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களதும், தமிழ் பேசும் மக்களதும் பூர்வீக வாழ்விடங்களாகும்.

இலங்கை நாடு ஏற்றுக்கொண்டு, கைச்சாத்திட்டுள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பின் குடியியலுரிமைகள் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சாசனத்திலும், பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் தொடர்பான சாசனத்திலும் அடங்கியிருக்கும் விதிகளின் பிரகாரம் தமிழ் மக்கள் ஒரு தனித்துவமான மக்கள் என்ற அடிப்படையில் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்களாவர்.

முன்னர் இருந்தவாறு ஒன்றுபட்ட வடக்கு - கிழக்கு அலகைக்கொண்ட சமஷ்டிக் கட்டமைப்பிற்குள்ளே அதிகாரப்பகிர்வு ஏற்பாடுகள் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இது வடக்கு - கிழக்கில் வாழும் எந்த ஒரு மக்கள் மீதும் எவ்வித முரண்பட்ட தாக்கத்தையும் ஏற்படுத்தா வண்ணம் இருத்தல் அவசியம்.

பகிரப்பட்ட இறையாண்மையின் அடிப்படையில் உருவாக்கப்படும் அதிகாரப்பகிர்வு ஏற்பாடானது நிலத்தின் மீதும், தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், சட்டம் - ஒழுங்கு, சட்ட அமுலாக்கம் என்பவற்றின் மீதும், சமூக பொருளாதார அபிவிருத்தியின் அங்கங்களான சுகாதாரம், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி, விவசாயம், மீன்பிடி, கைத்தொழில், கால்நடை அபிவிருத்தி, பண்பாட்டுத்துறை, உள்நாட்டிலும், வெளிநாட்டிலுமிருந்து வளங்களை திரட்டிக்கொள்ளல் மற்றும் நிதி அதிகாரம் என்பவற்றின் மீதானதாகவும் இருக்க வேண்டும்.

- மேற்குறித்த யாவும் ஒன்றுபட்டதும் பிளவுறாததுமான இலங்கைக்குள் வன்முறையற்ற சமாதான வழிமுறைகளில் அமைந்த பேச்சுவார்த்தையூடாக நிறைவேற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

வடக்கு கிழக்கின் வரலாற்றுக் குடிகளான தமிழ் பேசும் முஸ்லிம் மக்களும் மேற்கொள்ளப்படும் அனைத்து அதிகாரப்பகிர்வு ஏற்பாடுகளினதும் நன்மைகளைப் பெற உரித்துடையவர்கள்.

### 3. வடக்கு கிழக்கு இராணுவமயமாக்கப்படல்

2009ம் ஆண்டு யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து ஆரம்பமான வடக்குக் கிழக்கின் இராணுவமயமாக்கல், மக்களின் சுதந்திரம் மற்றும் உரிமைகளில் முறைசாராத, சட்ட முறைக்கப்பாற்பட்ட மற்றும் தன்னிச்சையான இராணுவ அடக்குமுறைகளை கொண்டுவந்ததன் மூலம் தமிழ் பேசும் மக்களின் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இப் பகுதிகளில் சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தின் தலையீடு ஜனநாயக நிறுவனங்களை படிப்படியாக அழித்ததுடன், அரசு நிதியுதவியுடன் நடைபெற்ற பொருளாதார நடவடிக்கைகளில் காணப்பட்ட இராணுவ தலையீடு, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளையும், வடக்கு மற்றும் கிழக்கில் விவசாயத் துறையையும் மோசமாக பாதித்தது. மேலும், சமூக ஆர்வலர்கள் மற்றும் சிவில் நிறுவனங்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் வேறுபட்ட கருத்துடையவர் எனக்கருதப்படும் நபர்கள் ஆகியோர் மீதான கண்காணிப்பு, அச்சுறுத்தல் மற்றும் துன்புறுத்தல் ஆகியன, அச்சம் மற்றும் சந்தேகம் மிகுந்த சூழலை உருவாக்கியதுடன், ஏற்கனவே மன அதிர்ச்சியில் ஆழ்ந்திருந்த மக்களை மேலும் அதிர்ச்சி மற்றும் மன அழுத்தத்திற்கு உட்படுத்தி, அவர்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பவிடாது செய்தது.

ஜனநாயகத்தில் இராணுவத்தின் பங்கு தெளிவாக வரையறுக்கப்பட்ட ஒன்று என்றும் அது பொதுமக்களின் அதிகாரம் மற்றும் மேற்பார்வைக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாக நம்புகிறது. சிவில் நிர்வாகம், பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் சட்ட அமுலாக்கல் செயற்பாடுகளில் இராணுவம் ஈடுபடுவதையோ அல்லது குடியுரிமைகளைக் கட்டுப்படுத்துவதற்கு இராணுவம் சட்டமுறைக்கப்பாற்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்துவதையோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டனம் செய்கிறது. இந்த பின்னணியில், பல்வேறு நோக்கங்களுக்கான பணிக்குழுக்களை நியமிப்பதில் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை ஈடுபடுத்துதல் போன்ற அரசாங்கத்தின் தற்போதைய நடவடிக்கைகள் தொடர்பில் நாம் அதிக அக்கறை கொள்கிறோம்.

ஜனநாயக வெளி மற்றும் நிறுவனங்களை துரிதமாக மீள் - இராணுவமயமாக்கலுக்கெதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் சவால் விடுக்கும். மேலும் நாடாளுமன்ற செயல்முறைகள், சர்வதேச மட்டத்தில் பரிந்துபேசுதல், இராணுவமயமாக்கல் காரணமாக குடிமை உரிமைகள் தடைசெய்யப்பட்ட அல்லது மீறப்படுவோர்க்கு ஆதரவளித்தல் உள்ளிட்ட பல வழி முறைகளை பயன்படுத்துவதன் மூலம் இராணுவமயமாக்கலை நீக்குவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைப்பு விடுக்கும்.

### 4. கடந்த காலத்தை கையாளுதல்

19 மே 2009 அன்று, முப்பது ஆண்டுகால யுத்தம் முடிவடைந்தபோது, பேரழிவிற்குள்ளான வடகிழக்கில் அளவிட முடியாத இழப்பு மற்றும் அதிர்ச்சியை அனுபவித்த மக்களே எஞ்சியிருந்தனர். நாட்டிற்குள்ஐம்பது இலட்சத்துக்கும் அதிகமான தமிழர்கள் இடம்பெயர்ந்ததுடன் யுத்த காலத்தில் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இறுதி கட்ட யுத்த கால இராணுவத் தாக்குதலின் போது எழுபதாயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டதாக நம்பத்தகுந்த மதிப்பீடுகள் சுட்டிக்காட்டுகின்றன. மேலும் பலர் கடுமையாக காயமடைந்ததோடு, அங்கவீனப்பட்டுள்ளனர். அத்தோடு பலர் காணாமல் போயுள்ளனர். போரினால் வடக்கு மற்றும் கிழக்கில் ஏற்பட்ட சமூக - பொருளாதார மாற்றமானது இப்பிரதேசங்களில் உள்ள மக்கள் இன்றும் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதிலும் மற்றும் வாழ்க்கையை மீளகட்டியெழுப்புதலிலும், தாக்கத்தை செலுத்துகிறது.

(07ஆம் பக்கம் பார்க்க)

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் இன்னும் தீர்க்கப்படவில்லை. காணாமல்போனவர்களின் அலுவலகம் மற்றும் இழப்பீடு வழங்கும் அலுவலகம் ஆகியவை சட்டப்படி உருவாக்கப்பட்டிருந்தாலும், காணாமல் போனவர்களின் உறவினர்களுக்கு இதுவரை எந்த பதிலும் கிடைக்கவில்லை. இராணுவத்தில் சரணடைந்தும் காணாமல் போன பலருக்கு என்ன நடைபெற்றது என்ற கேள்வி இன்னமும் உள்ளது. இவ்விடயங்களில் உண்மை கண்டறியப்பட வேண்டும், நீதி வழங்கப்பட வேண்டும் மற்றும் இழப்பீடு கொடுக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்துகிறது.

யுத்தம் இடப்பெற்ற காலம் முழுவதும், தமிழர்கள் தமது அடையாளத்தின் காரணமாக மட்டுமே இலக்கு வைத்து நடாத்தப்பட்ட வன்முறை, துன்புறுத்தல் மற்றும் அச்சுறுத்தலுக்கு ஆளானார்கள். இந்த அடிப்படைக் காரணி அடங்கலாக தமிழ் சமூகம் அனுபவித்த பாகுபாடு மற்றும் வன்முறை ஆகியன எந்தவொரு நிலைமாறுகால நீதி செயல்முறையிலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். எந்தவொரு இடைக்கால நீதி செயல்முறையும் பக்கச்சார்பற்ற, அனைத்தையும் உள்ளடக்கிய, வெளிப்படையான மற்றும் பாதிக்கப்பட்டவர் தொடர்பில் கரிசனை உள்ளதாக இருக்க வேண்டும்.

## 4.1. நீதி மற்றும் பொறுப்புக்கூறல்

இனக்கலவரத்தின் வரலாறு முழுவதும் தமிழ் மக்கள் அனுபவித்த மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்ட மீறல்களுக்கான நீதி என்பது, விட்டுக்கொடுப்பற்றதாகவும் அவர்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதில் இன்றியமையாத ஒரு அங்கமாக அமைகிறது.

இலங்கைக்குள் நீதியை நிலைநாட்டுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நம்பிக்கையுடன் செயல்பட்ட போதிலும், அதன் முயற்சிகள் வெற்றிகரமாக அமையவில்லை. இப்பின்னணியில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு சுயாதீனமான சர்வதேச பொறிமுறையை தொடர்ந்து ஆதரிப்பதுடன், இலங்கையில்நடந்துகொண்டிருக்கும் ஆட்கொணர்வு மனு வழக்குகள் போன்றவற்றில் செயற்படுவது போலவே, நீதி வழங்கப்படாத சந்தர்ப்பங்களில், இலங்கை தன் ஆணையை சரிவர நிறைவேற்ற வேண்டும் என்பதை வலியுறுத்திக் கொண்டிருக்க வேண்டும்.

தற்போதுள்ள இயங்கிவரும் நிறுவனங்கள் மற்றும் பொறிமுறைகளின் பொறுப்புக்கூறலை பேணுவதன் ஒரு பகுதியாக, மிருசுவில் கொலைவழக்கில் தண்டனை பெற்ற சுனில் ரத்நாயக்கவுக்கு வழங்கப்பட்ட ஜனாதிபதியின் பொது மன்னிப்பை சவாலுக்குட்படுத்தி அடிப்படை உரிமை மனுத் தாக்கல் செய்தது போல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது, அவர்களின் புறநிலைத் தன்மை மற்றும் பக்கச்சார்பற்ற தன்மையை சோதிப்பதற்கு இப்பொறிமுறைகளை பயன்படுத்த வைப்பதற்கான எல்லா சந்தர்ப்பங்களையும் உபயோகிக்கும்.

## 4.2. உண்மை

மனித உரிமை மீறல்களுக்குள்ளானவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவது, அதாவது காணாமல் போனவர்களின் குடும்பங்கள் உண்மையை அறிந்து கொள்ளுதல் என்பது, எந்தவொரு நீதி பொறிமுறையின் வெற்றியோடு ஒன்றிணைந்ததாகவும், அதற்கு இன்றியமையாததாகவும் உள்ளது. இந்த கோரிக்கைகளை பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

உண்மையை கண்டறியும் பொறிமுறையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்து ஆதரிக்கும். நாட்டில் ஒரு உண்மையை கண்டறியும் பொறிமுறையானது திறம்பட செயல்பட வேண்டுமென்றால், பயமோ, அச்சுறுத்தலோ, சிறுபான்மையினர், சிவில் சமூகம் மற்றும் மாற்றுக்கருத்துடையோர்க்கு எதிரான வன்முறையோ துன்புறுத்தலோ இல்லாத ஒரு சூழலொன்று காணப்பட வேண்டும் எனும் புரிதலின் அடிப்படையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவ்வாறு செயற்படும்.

## 4.3. இழப்பீடுகள்

வரலாற்று இழப்புகளையும், பெண்கள், போரினால் பாதிக்கப்பட்டவர்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியவர்கள் போன்ற மோசமாக பாதிக்கப்பட்டுள்ள குழுக்களின் தேவைகளையும் கணக்கில் எடுத்துக் கொள்ளும் ஒரு விரிவான, முழுமையான இழப்பீட்டுத் திட்டமொன்று வகுக்கப்பட வேண்டும். திட்டத்தை உருவாக்கும் செயல்முறை பரந்த உள்ளடக்கமுடையதொன்றாக இருப்பதுடன் அது பாதிக்கப்பட்ட சமூகங்கள் மற்றும் சிவில் சமூகத்துடனான பரந்த ஆலோசனையுடன்நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

## 4.4. நினைவுகூரல்

போரில் குடும்ப உறுப்பினர்களையும் அன்புக்குரியவர்களையும் இழந்த அனைவருக்கும் அவர்களை நினைவுகூர உரிமை உண்டு. யுத்தம் முடிவடைந்ததிலிருந்து, வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள மக்கள் நினைவேந்தல் நடவடிக்கைகளில் சுதந்திரமாக ஈடுபடுவதை அரசு தடுத்துள்ளது, இதன் மூலம் அவர்கள் பல ஆண்டுகளாக அனுபவித்து வரும் வேதனை உணர்வும் அதிர்ச்சியும் அதிகரித்துள்ளது.

தமிழ் மக்களின் நினைவுகூரும் உரிமை மதிக்கப்பட வேண்டும் என்றும், அவர்கள் யுத்தம் முடிவடைந்ததிலிருந்து நடைபெற்று வருவதைப் போலவே அவர்கள் நினைவுகூரலில் ஈடுபடும்போது மிரட்டல், துன்புறுத்தல் மற்றும் அச்சுறுத்தல்களுக்கு ஆளாகக்கூடாது. மேலும் நினைவுக் கிரியைகளில் ஈடுபடுவதைத் தடுக்கக்கூடாது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோருகிறது.

## 5. கருத்துச் சுதந்திரமும் குழுமச் சுதந்திரமும்

இப்பிரதேசங்களில் உள்ள சிவில் சமூக அமைப்புகள், செயலார்வலர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோர் கண்காணிப்பு, துன்புறுத்தல் மற்றும் அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதையும், சிவில் சுதந்திரம் முடக்கப்படுவதற்கான முயற்சிகள் இடப்பெறுவதையும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு கவனத்தில் கொள்கிறது. நாடாளுமன்ற செயல்முறைகள், சட்ட ரீதியான தலையீடுகள் மற்றும் சர்வதேச மட்டத்தில் பரிந்துபேசுதல் ஆகியவற்றின் மூலம் இந்த அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு எதிராக இருக்கும்.

## 6. பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் அரசியல் கைதிகள்

யுத்தம் முடிவடைந்து ஒரு தசாப்தத்திற்கும் மேலாகியும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் (PTA) கீழ் கிட்டத்தட்ட தொண்ணூறு பேர் சிறைகளில் உள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவர்களை விடுதலை செய்வதற்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ரத்து செய்வதற்கும் அழுத்தம் கொடுத்து வருகிறது. இந்த நோக்கத்தை கடுமையாக தொடர்ந்து முன்னெடுக்கும்.

## 7. சமூக - பொருளாதாரப் பாதுகாப்பு

வடக்குகிழக்கு மக்கள் தங்கள் வாழ்வாதாரங்கள் மற்றும் பொருளாதார பாதுகாப்பைப் பொறுத்தவரையில் பாரிய சேதத்தை விளைவித்த இழப்பொன்றை சந்தித்துள்ளனர். பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள், காணாமல் போனவர்களின் குடும்பங்கள், முதியவர்கள், அனாதைக் குழந்தைகள் மற்றும் முன்னாள் போராளிகள் ஆகியோர் சொல்லொண்ணா துயர்களை அனுபவிப்பதுடன் மென்மேலும் வறுமைக்குள் தள்ளப்படுகிறார்கள். இவற்றின் விளைவால் அவர்கள் சுரண்டலுக்குள்ளாகக் கூடிய நிலைமையில் காணப்படுகிறார்கள். சிறுவர்களை எடுத்துக்கொண்டால், இது அவர்களின் வாழ்க்கை வாய்ப்புகளை அழித்து, அவர்கள் சமூகத்தில் மேல்நோக்கி நடைபோட முடியாமல் தடுக்கிறது. வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் தங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு இன்றியமையாத பின்வரும் அம்சங்களை நோக்கி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயல்படும்.

* வடக்குகிழக்கில் ஒரு மாற்று பொருளாதார முறைமை உருவாக்கப்படும். இது பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பை அதிகரிக்கும்.

* பல தசாப்தங்களுக்கு முன்னர் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் கூட்டுறவு இயக்கமானது மிகவும் வெற்றிகரமாக இருந்தது. கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கூட்டுறவு கிராமிய வங்கிகளைப் பலப்படுத்துவதன் மூலம் பிராந்திய மற்றும் கிராமப்புற பொருளாதாரங்கள் புத்துயிர் பெறுவதை நாங்கள் தீவிரமாக ஊக்குவிப்போம்.

* வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள மக்களின் பொருளாதாரத் தேவைகளை அரசாங்கம் பூர்த்தி செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுக்கும் அதேவேளை, வடக்கு மற்றும் கிழக்கின் பொருளாதார வளர்ச்சியில் புலம்பெயர்ந்தோர் மற்றும் சர்வதேச சமூகத்தினரின் முதலீட்டை அதிகரிப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயல்படும். வடக்கு மற்றும் கிழக்கின் வளர்ச்சிக்கான விரிவான திட்டத்தின் ஒரு அம்சமாக, குறிப்பாக இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதை கருத்திற் கொண்டு, வடகிழக்கில் வெளிநாட்டு முதலீடுகள் நேரடியாக இடம் பெறுவதை ஊக்கப்படுத்த வேண்டும்.

* பொருளாதார, கலாச்சார மற்றும் இலக்கிய நடவடிக்கைகளுக்கான புதிய வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கோடு, பலாலி சர்வதேச விமான நிலையம் வழியாகவும், காங்கேசன்துறை துறைமுகத்தினூடான பயணிகள் சேவை மற்றும் பண்டமாற்று சேவை கடல் மார்க்கமாகவும் இந்யாவுக்கான போக்குவரத்து வசதிகள் செய்யப்படுதல் வேண்டும்.

* சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு சாதகமான வட்டி வீதத்துடன் கடன் வழங்குதல் மற்றும் உதவித்தொகை வழங்குதல் போன்றன முலம் ஆதரவு வழங்கப்பட வேண்டும்.

* வட கிழக்கிலுள்ள விவசாயம் மற்றும் மீன்வளத் துறைகளுக்கான ஆதரவு வழங்கப்பட வேண்டும், இதில் துறைமுகங்களை மீளக் கட்டியெழுப்புதல் மற்றும் இலங்கையின் கடல் எல்லைகளை மீறுபவர்களால் கடல் வாழ்க்கை மற்றும் வளங்களுக்கு பாதிப்பு ஏற்படாமையை உறுதிப்படுத்தல் என்பன அடங்கும். மேலும், விவசாயம் மற்றும் மீன்வளத் துறைகளுக்கான விநியோகம், சந்தைப்படுத்தல் மற்றும் போக்குவரத்துக்கான வசதிகள் நிறுவப்பட்டு, தற்போதுள்ள நடைமுறையிலுள்ள பொறிமுறைகளும் மற்றும் செயல்முறைகளும் பலப்படுத்தப்பட வேண்டும்.

* ஏற்றுமதிச் சாத்தியமுள்ள விவசாயம் சார்ந்த தொழில்களின் வளர்ச்சியில் கவனம் செலுத்தப்படும். நாட்டில் பரந்த சந்தையைக் கொண்ட பொருட்களின் பயிர்ச்செய்கை ஊக்குவிக்கப்படும். திராட்சைப் பழங்களின் உற்பத்தியும் ஏனைய பழங்களின் பதப்படுத்தல் மற்றும் தகரத்தில் அடைத்தல் ஆகியவற்றுக்கான ஆலைகள் நிறுவப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

* சேதன வேளாண்மை பொருட்களின் உற்பத்தி மற்றும் விநியோகத்தை ஊக்குவிப்பதற்கான ஒவ்வொரு முயற்சியையும் செய்வோம்.

* பனைவள உற்பத்திகளை நவீனமயப்படுத்துதலும் அதற்கான நவீன பொறிமுறைகளை கையாண்டும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும் வேண்டும்.

* யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதிகளில் மீன்களைப் பதனிடுவதற்கும் தகரத்திலடைப்பதற்குமான ஆலைகளை நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

* கால்நடை மற்றும் பாற்பொருள்களின் உற்பத்தி ஊக்குவிக்கப்படும்.

* பல்வேறு திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள் மூலம் நீர் பற்றாக்குறை பிரச்சினைகள் குறைக்கப்படும். நமது விவசாயத் தேவைகளுக்கான நீர்வளத்தை அதிகரிக்கும் வகையில் வடக்குக்கிழக்கில் உள்ள அனைத்து சிறு குளங்களையும் புனரமைக்கும் திட்டமும், வடக்கில் உள்ள குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முன்னெடுப்புக்களும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

* பல்கலைக்கழகங்களுக்குள் நுழைய முடியாதவர்கள் சம்பந்தப்பட்ட துறைகளில் உயர் கல்வியைத் தொடர புதிய நிறுவனங்களை நிறுவுவதன் மூலம் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழில்நுட்ப, தொழில் பயிற்சி ஆகியவற்றிற்கு அதிகரித்த வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும்.

* அனைத்து முன்னெடுப்புக்களிலும் எப்போதும் பாலின சமத்துவமின்மை மற்றும் பொருளாதாரத் துறையில் சமத்துவமின்மை காணப்படுவதை கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும் பெண்களின் தனித்துவமான தேவைகள் மற்றும் பிரச்சனைகள் கவனிக்கப்படுவதும் உறுதி செய்யப்பட வேண்டும்.

* அரசு வேலைவாய்ப்பின் மூலம் கிடைக்கும் பிரதான வருமானம். பாடசாலைகள் மற்றும் அரச நிர்வாகத்தில் உள்ள அனைத்து வெற்றிடங்களும் தகுதியான நபர்களால் நிரப்பப்பட வேண்டும். அவர்களின் தகுதிப்படி அவர்களுக்கு கிடைக்க வேண்டிய பதவி உயர்வுகளுக்கெதிராக எழக்கூடிய தடைகளை நீக்க முயற்சிப்போம்.

* யாழ்ப்பாண மாவட்டத்திற்கு வெளியே வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அனைத்து மாவட்டங்களிலும் கலாச்சார நடவடிக்கைகளை நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

* மது மற்றும் போதைப்பொருளுக்கு அடிமையாதல் வலுவாகவும் திறமையாகவும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படும்.

* எல்லா வகையான வன்முறைகளும் முடிவுக்கு கொண்டுவரப்படும், குறிப்பாக, பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கெதிரான துஸ்பிரயோகங்கள் நிறுத்தப்பட வேண்டும்.

* வடக்கு மாகாணத்தில் உள்ள முன்பள்ளி மற்றும் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களை பாதிக்கும் அனைத்து சிக்கல்களும் உடனடியாக கவனத்திலெடுக்கப்பட்டு, அவர்களுக்கு திருப்திகரமான முறையில் அப்பிரச்சனைகள் தீர்க்கப்படும்.

* வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து தொல்பொருள் தளங்களும் அந்தந்த மாகாண சபைகளின் கட்டுப்பாட்டு எல்லைக்குள் கொண்டுவரப்படும்.

## 8.1. இடம்பெயர்ந்தோரின் உரிமைகள் மற்றும் காணி உரிமை

ஆயுத போராட்டத்தினால், 500,000திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் வீடற்றவராகி நிர்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டனர். கடந்த பல ஆண்டுகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அயராத முயற்சிகளின் காரணமாக, 2015 ஜனவரியில் ஆட்சி மாற்றத்திற்கு பின்னர், நிலங்களை திருப்பித் தருவதற்கும், வடக்கில் வலிகாமதிலிருந்தும் கிழக்கில் சம்பூரிலிருந்தும் இடம்பெயர்ந்த தமிழ் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கும் முடிவுகள் எடுக்கப்பட்டன. மேலும், கேப்பாபுலவில் 1,000 ஏக்கர் விவசாய நிலங்களும் விடுவிக்கப்பட்டுள்ளன. இருந்த போதிலும், இலங்கை அரசு, சர்வதேச சமூகம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபைக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதியிற்கு மாறாக, பலர் இன்னமும் தங்கள் சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்படவில்லை. இடம்பெயர்ந்தவர்களுக்கு இன்னும் நிரந்திர தீர்வு எட்டப்படவில்லை.

யுத்தத்தின் போது வடக்கு மற்றும் கிழக்கில் இடம்பெயர்ந்த மக்கள் தாமதமின்றி தங்களின் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும். மேலும் இவர்களுக்கு வீட்டு மற்றும் வாழ்வாதார வசதிகள் அவர்களுடைய சுயமரியாதையை மதிக்கும் வகையில் வழங்கப்பட வேண்டும். இராணுவக்கட்டுப்பாட்டின் கீழுள்ள தனியார் நிலம் விடுவிக்கப்பட்டு, ஆக்கிரமிப்பு காலத்திற்குரிய இழப்பீடு உரிமையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும். மிரட்டி அல்லது நிர்பந்தித்து கையகப்படுத்தப்பட்ட நிலம் அதன் உரிமையாளர்களுக்கு திருப்பி வழங்கப்பட வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புநிலங்களை விடுவிப்பதற்கு கேப்பாபிலவு; மக்களை போல் அயராத பிரச்சார முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் அனைத்து மக்களுக்கும் அதன் முழு ஆதரவை வழங்கும்.

மீள்குடியேற்ற திட்டங்கள் சமத்துவமான முறையில் செயல்படுத்தப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்துகிறது. குறிப்பாக பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் மற்றும் முதியவர்கள் போன்ற ஒடுக்கப்பட்ட மற்றும் அதிகம் பாதிக்கப்பட்ட குழுக்கள், அவயங்கள் இழந்தவர்கள் தொடர்பில் மேலதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். மிக முக்கியமாக, இத்தகைய திட்டங்கள் செயல்படுத்தப்படும் போது வெளிப்படைத்தன்மை அவசியம்.

நாட்டை விட்டு வெளியேறிய நபர்கள் நாட்டிற்கும் தங்கள் வீடுகளுக்கும் திரும்ப அனுமதிக்கப்பட வேண்டும். மேலும் அவர்கள் திரும்பி வருவதற்கு ஏதுவான சூழ்நிலையும் உருவாக்கப்பட வேண்டும். குறிப்பாக, தென்னிந்தியாவில் சுமார் 100,000 அகதிகளின் மீள்வருகை துரிதப்படுத்தப்பட்டு இவர்களின் மீள்குடியேற்றம் மற்றும் மறு - ஒருங்கிணைப்பிற்கு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

## 8.2 காணி

காலங்காலமாக நடைபெற்று வரும் அரசின் காலனித்துவப்படுத்துதல் மற்றும் சிங்களமயமாக்குதல் முயற்சிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுவதனால் வடக்கு கிழக்கு மக்களின் நில உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலுவாக நம்புகிறது. மகாவலி, காடுகள், வனவிலங்கு மற்றும் தொல்பொருள் தொடர்பான சட்டங்கள்; தமிழ் மக்கள் நில உரித்துக்கள் பாதிப்படையும் வகையில் மறைமுகமாக பயன்படுத்தப்பட்டுள்ளன. கிழக்கு மாகாணத்திற்கான தொல்பொருள் தளங்களுக்கான ஜனாதிபதிச் செயலணி நியமிக்கிப்பட்டதும் இத்திசையில் பயணிக்க அரசு எடுத்த அப்பட்டமான பார பட்ச முயற்சி ஆகும். ஆகையால், நில ஆவணங்கள் இழந்தவர்கள் அல்லது ஆவணங்கள் பதிவு செய்யப்படாத நபர்கள், மற்றும் பதிவு மறுக்கப்பட்டதால் அல்லது ஆவணப்படுத்தல் செயல்முறை களை அணுக முடியாமல் போனவர்கள் ஆகிய அனைவருக் கும் நில உரிமை மறுக்கப்படுவதில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டியதன் அவசியத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கீகரிக்கிறது.

(08ஆம் பக்கம் பார்க்க)

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொல்பொருள் இடங்களை பாதுகாத்தல் என்ற போர்வையில் பிராந்தியத்தை சிங்களமயமாக்கும் முயற்சிகளையும், பிராந்தியத்தின் சமூகங்களின் மத வழிபாட்டுத்தலங்களை அழிப்பதையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்த்து நிற்கின்றது. அரச மற்றும் குறிப்பாக தனியார் நிலங்களை அபிவிருத்தி என்ற பெயரில் பெரும்பான்மை கொள்கைகளை முன்னெடுத்தலை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எச்சரிக்கையாய் இருக்கும். அத்துடன் இது போன்ற முயற்சிகளின் பாதகமான சுற்றுச்சூழல் தாக்கத்தை குறித்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்த்து நிற்கும்.

ஏறக்குறைய மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் எடுக்கப்பட்ட முடிவான கல்முனைக்கென்றொரு தனித்த தமிழ் பிர தேச செயலகம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் வலியுறுத்தி முன் வைக்கின்றது.

**9. முன்னாள் போராளிகளின் வாழ்க்கையை மீள்கட்டியெழுப்புதல்**

தமிழீழ விடுதலை புலிகளின் முன்னாள் உறுப்பினர்களாக அரசாங்கத்தால் அடை யாளம் காணப்பட்ட நபர்கள் தடுத்து வைக்கப்பட்டு இதன்போது பல உரிமை மீறல்களுக்கு உள்ளாகினர். அவர்கள் விடுவிக்கப்பட்டதன் பின்பு அவர்களின் வாழ்க்கையை மீள்கட்டியெழுப்ப தேவையான ஆதரவு அவர்களுக்கு வழங்கப்படவில்லை. எதிர்மாறாக, அவர்கள் பாது காப்புப் படைகள் மற்றும் உளவுத்துறையினரால் கண்காணிப்பு மற்றும் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுவதோடு சமூகத்தினாலும் ஓரங்கட்டப்படுகின்றனர். இது அவர்களுக்கு வேலை வாய்ப்புகளை அணுகுவதற்கும் அவர்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் பெரும் சவாலாக அமைந்தது. மேலும், பலர் தொடர்ந்தும் பயங்கரவாத புலனாய்வுத் துறையால் விசாரணைக்கு அழைக்கப் படுகின்றனர். இவ் விசாரணையானது தற்காலத்தில் நடந்த ஒரு குற்றத்திற்கான விசாரணையாக அல்லாது, 2009ற்கு முன் தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தில் அவர்களின் நிலைப்பாடு மற்றும் பங்கு ஆகியவற்றில் மட்டுமே கவனம் செலுத்தியதாகத்தென்பட்டது.

யுத்தம் முடிவடைந்ததைத்தொடர்ந்து ஒரு தசாப்தத்திற்கும் மேலாக, அரச புனர்வாழ்வு திட்டங்களுக்கு அனுப்பப்பட்டவர்கள் தங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதில் பல தடைகளை எதிர்கொள்கின்றனர். எனவே அவர்களின் தேவைகள் கண்டறியப்பட்டு பிரச்சினைகள் நிவர்த்தி செய்யபட வேண்டும். அவர்களுக்கு பொருத்தமான வாழ்வாதாரத்தை பெற்றுக்கொள்ள திட்டங்கள் தீட்டப்படும் அதே வேளை, அவர்கள் அரசால் துன்புறுத்தல் அல்லது அச்சுறுத்தல்களுக்கு ஆளாகாமல் இருப்பதை உறுதி செய்யப்பட வேண்டும். அத்தோடு அவர்கள் முற்றுமுழுதாக சமூகத்துள் உள்வாங்கப்படுதலும் வேண்டும்.

பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் பல காரணிகளால் மாறுபட்ட பிரச்சினைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இவ் வர்க்கத்தினருக்கு சிறப்பு உதவி நடவடிக்கைகள் கிடைக்கபெற வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்துகிறது.

**10. பாலின சமத்துவம்**

வடக்கு- கிழக்கு மக்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும் போதும், அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க உழைக்கும்போது, பாலின சமத்துவமின்மை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புரிந்து கொண்டுள்ளது. யுத்தமானது ஆண்களோடு ஒப்பிடுகையில் பெண்களை பல்வேறு வித்தியாசமான முறைகளில் பாதிக்கப்படுகின்றனர். மேலும் பெண்கள் வரலாற்று, அமைப்புசார் மற்றும் கட்டமைப்புசார் பாகுபாடுகளுக்கு உட்படுத்தப் பட்டுள்ளமையால், அரசியல் தீர்வு முதல் வடக்குக்கிழக்கை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் வரை ஒவ்வொரு முயற்சியும், இது பெண்களை எவ்வாறு பாதிக்கும் என்பதை கருத்திற்கொண்டு பெண்களின் குறிப்பிட்ட தேவைகள் மற்றும் இன்னல்கள் தீர்க்கப்பட வேண்டும்.

**11. சர்வதேச சமூகத்தின் வகிபாகம்**

தமிழ் மக்கள் உள்ளூர் பொறிமுறைகளினூடாகத் தமது தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமானதும், ஏற்றுக் கொள்ளக் கூடியதுமானதொரு தீர்வினைப் பெற்றுக்கொள்ள அர்ப்பணிப்புடனே இருந்துவந்துள்ளனர். இலங்கை அரசே கிட்டிய சந்தர்ப்பங்களையெல்லாம் உதறித் தள்ளியது மட்டுமல்லாது தொடர்ச்சியாக இலங்கைத் தமிழர் மீது இனஅழிப்பைக் கட்டவிழ்ப்பதனூடாக அடக்கியாளவும் தலைப்பட்டது. இலங்கை அரசின் இந்த நிலைப்பாடே தேசிய இனப்பிரச்சினையை சர்வதேசமயமாக்கியதோடு சர்வதேசவகிபாகத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயத்தையும் இலங்கை அரசிற்கு ஏற்படுத்தியது. இலங்கை அரசின் இந்த நிலைப்பாட்டின் தவிர்க்க முடியா விளைவான ஆயுதப் போராட்டம் இன்று முடிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்போது சர்வதேச தலையீட்டின் மூலம் விளைந்த சிறிதளவான நன்மைகளையும் களைய முயற்சிகள் எடுக்கப் படுகின்றன. இலங்கையில் வாழும் பல்லின மக்களிடையே நிரந்தரமானதும், நிலையானதுமான நல்லிணக்கத்தை ஏற்படுத்தி அதன் மூலம் அனைவரும் சமத்துவமுள்ள குடிமக்களாக வாழ வழிசெய்ய சர்வதேச வகிபாகம் தொடர்வது முன்னை விட தற்போது அத்தியாவசியமானது என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடாகும். இதன் அடிப்படையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பானது சர்வதேச சமூகத்தின் முயற்சிகளோடு தொடர்ந்தும் ஈடுபடுவதோடு தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஐ.நா. சிறப்பு நடைமுறைகள் போன்ற சர்வதேச வழிமுறைகளைப் பயன்படுத்துவதில் அதன் கவனத்தை செலுத்தும்.

அரசாங்கத்தின் இணை அனுசரணையுடன் நிறுவப்பட்ட ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழுத் தீர்மானங்களான 30/1, 34/1, 40/1 முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம்

இலங்கை நாட்டில் ஒரு சர்வாதிகார ஆட்சி தோன்றுவதைத் தடுக்கவும், ஜனநாயக கொள்கைகளை பாதுகாத்து வளர்க்கவும் நாட்டில் முற்போக்கு சக்திகளுடன் நாங்கள் சேர்ந்து பயணிப் போம். 19ஆவது திருத்தத்தால் அமைக்கப்பட்ட சுயாதீன நிறுவனங்கள் பாது காக்கப்பட்டு மேலும் பலப்படுத்தப்பட வேண்டும். மேலும் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை பலப்படுத்த இடமளிக்காது நாடாளுமன்ற ஜனநாயக கட்டமைப்பை நிலைநிறுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

**12. எதிர்காலம்**

யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை தேர்தல் மாவட்டங்களில் வாழும் வாக்காளர் யாவரும் ஒன்றுபட்டு, வடக்கு கிழக்கு மக்களின் உரிமைகள் மற்றும் அபிலாஷைகளுக்காகத் தொடர்ந்து குரல் எழுப்ப, செயலாற்ற முழுமையாகத் தமது வாக்குகளை இலங்கைத் தமிழ்; அரசுக் கட்சி என்ற பெயரிலும், வீட்டுச் சின்னத்திலும் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களித்து, தமிழ் மற்றும் தமிழ் பேசும் மக்களது அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினால் இந்த தேர்தல் அறிக்கையில் முன்மொழியப் பட்டிருக்கும் செயற்றிட்டங்களுக்கு தங்கள் ஜனநாயக ஆணையினை பூரணமாக வழங்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அன்புடன் வேண்டி நிற்கின்றது.

இத் தேர்தல் அறிக்கையானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளான இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழீழ விடுதலைக் இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் ஆகியவற்றால் இணைந்து வெளியிடப்படுகின்றது.

# தமிழர் தம் வாக்குகளை பயனுறப் பிரயோகிப்போம்!

ந.சதாசிவ ஐயர்
(ஓய்வு பெற்ற மேலதிக பதிவாளர் நாயகம்)

இலங்கை நாடாளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் சில நாள்களே உள்ள நிலையில் தேர்தல் கடமை செய்த அனுபவத்தால் ஒரு பொதுமகனாக கட்சி சார்பற்ற நிலையில் மக்களைத் தெளிவு படுத்துதற்காக சில விடயங்களை முன் வைக்கலாம் என நினைக்கிறேன்.

கட்சிகள், உறவுகள், நட்புக்கள் என்பவற்றுக்கப்பால் வாக்கு சிதறாமல் - பயனில்லாது போகாமல் ,எமக்கிருக்கும் வாக்களிப்பு உரிமையை பயன்படுத்துவது எமது கடமையாகும்.

வேட்பாளர்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளால் - பேச்சுக்களால் - மனம் வெறுத்து வாக்களிக்காமல் இருப்பது பொருத்தமானதல்ல. எப்படியோ வாக்களிப்பு நடக்கத்தான் போகிறது. யாரோ தெரிவு செய்யப்படத்தான் போகிறார்கள். ஆதலால், இது விகிதாசார வாக்கெடுப்புமுறை என்பதால் கட்சிக்கான வாக்குகளே வெற்றியை நிர்ணயிக்கும் என்பதால் தனிப்பட்ட ஆசை, நிராசைகளுக்கு இடம் கொடாது - சொந்தபந்தம் பார்க்காது - அவர் சொன்னார், இவர்சொன்னார் என்றில்லாது - இன்றய தமிழ்த்தேச நிலையில் ஏதாவது ஒரு கட்சிக்கு பெரும்பான்மை பலம் கொடுத்துத் தவறாது வாக்களிக்க வேண்டும்.

ஒரு தேர்தல் மாவட்டத்தில் அளிக்கப்படும் வாக்குகளில் ஐந்து வீதத்துக்குக் குறைவான வாக்குகளைப் பெறும் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் பெறும் வாக்குகள் கழித்து வைக்கப்படும். அவை உறுப்பினரைத் தெரிவு செய்யும் கணக்கெடுப்பில் சேர்த்துக் கொள்ளப் படுதில்லை. ஆதால் அப்படியானவர்களுக்கு வாக்களித்தோரின் வாக்குகளும் ஒரு விதத்தில் பெறுமதியற்ற, செல்லுபடியற்ற வாக்குகளே யாகும். இதனை தமிழ் மக்கள் உணர்வதில்லை. அவர்கள் விகிதாசாரத் தேர்தல் முறையை அறியாது தனிப்பட்ட வேட்பாளருக்கும் அவர்களுக்கு பின்னால் நிற்பவர்களுக்கும் ஆதரவு தெரிவிப்பதாகக் கூறிக்கொண்டு வெல்ல முடியாதவர்களுக்கு தங்கள் வாக்குகளை செலுத்தி அவற்றைப் பியோசனமற்றதாக்குகின்றனர்

உதாரணமாக கடந்த 2015 நாடாளுமன்ற தேர்தலை எடுத்துக்கொண்டால் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் தமிழரசுக்கட்சி 69.12 வீதமும், ஈ.பி.டி.பி. 10.07 வீதமும் ஐ.தே.க. 6.67 வீதமும் ஐ.ம.சு.மு. 5.76 வீதமும், தமிழ் காங்கிரஸ் 5 வீதமும் பெற்றுள்ளன. ஏனய கட்சிகள் சுயேச்சைக் குழுக்கள் என்பன 3.38 வீத வாக்குகளைப் பெற்றுள்ளன. இந்த 3.38 வீதவாக்குகளும் ஐந்து வீதத்துக்கு உட்பட்டவை என்பதால் கணக்கெடுப்பிலிருந்து தள்ளி வைக்கப்பட்ட வாக்குகளாகும். அதே போன்று ஐந்து வீதத்துக்கு மேற்பட்ட வாக்குகளை பெற்ற ஐ.ம.சு.மு. கட்சியும் தமிழ் காங்கிரஸும் கூட அங்கத்துவத்தைப் பெறப் போதுமான வாக்குகளைப் பெற முடியவில்லை. ஆனால் ஈ.பி.டி.பி. மற்றும் மற்றும் ஐ.தே.க. ஆகிய கட்சிகளுக்குத் தலா ஓர் ஆசனம் கிடைக்க வழிசமைத்தது ஐ.ம.சு. முக்கும் தமிழ் காங்கிரஸுக்கும் கிடைத்த வாக்குகள்தான் என்பது விகிதாசார கணக்கீட்டுமுறை தெரிந்தவர்க்கே புரியும். எனினும் ஐ.ம.சு.முக்கு கிடைத்த வாக்குகள் தேசியப்பட்டியல் பிரதிநிதித்துவத்தக்கு உதவியிருக்கும். ஆனால் தமிழ் காங்கிரஸுக்கு கிடைத்த வாக்குகள் தேசிய மட்டத்திலும் தமிழருக்கு உதவாதவையாகின. பிரிந்து நின்று அளிக்கும் வாக்குகள் அரச பிரதான கட்சிகளுக்கும் அவர்களுக்கு வால்பிடிப்போருக்கும் சாதகமாய் அமையும் என்ற உண்மையை இதன்மூலம் புரிந்துகொள்ளலாம்.

வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலும் தமிழர் பிரதிநிதித்துவத்துக்குச் சவாலாய் அமைவது யாழ்ப்பாணம் போன்று தமிழ் மக்கள் பிரிந்து நின்று பெயரளவுக் கட்சிகளுக்கும் சுயேச்சைக் குழுக்களுக்கும் அளிக்கும் வாக்குகளே ஆகும்.

இது கடந்த முறை கிழக்க. மாகாணசபைத் தேர்தல் முடிவுகளை எடுத்துப் பார்த்தல் நன்கு புரியும். அத்தேர்தலில் உதிரிகளுக்கு போடப்பட்டு பிரயோசனமில்லாது போன சுமார் ஐயாயிரம் வாக்குகள் தமிழர் கூட்டமைப்புக்கு விழுந்திருந்தால் விகிதாசாரம் வேறுவிதமாக மாறியிருக்கும். கூட்டமைப்பு மாகாணசபையைக் கைப்பற்ற வாய்ப்பேற்பட்டிருக்கும்.

இங்குஓர் உண்மையைக்கூறியாகவேண்டியே உள்ளது. சிங்கள மக்கள் வெற்றி பெறும் கட்சிகளுக்குத் தங்கள் வாக்குகளை அளித்துத் தங்கள் வாக்குகளை பெறுமதியுள்ளதாக்குகின்றனர்.

உதாரணமாக குருநாகல் மாவட்டத்தைப் பார்ப்போமானால், குருநாகல் மாவட்டம் வாக்காளர் தொகை மிக அதிகமாக உள்ள ஒரு மாவட்டம். அங்கு 2015 நாடாளுமன்றத் தேர்தலில் ஐ.ம.சு.மு. 49.26 வீதமும், ஐ.தே.க. 45.85 வீதமும், ஜே.வி.பி. 4.2 வீதமுமாக 99.31 வீத வாக்குகளைப் பெற்றன. ஏனய கட்சிகளும் சுயேச்சையுமாக போட்டியிட்டவை (இருபத்தைந்துக்கு மேல்) பெற்றது வெறும் 00.69 வீத வாக்குகளே. இதே போன்றுதான் ஏனய மாவட்டங்களும். பல இன மக்கள் கலந்து வாழும் புத்தளம், நுவரெலியா போன்ற மாவட்டங்களிலும் பல கட்சிகளும் குழுக்களும் போட்டியிட்ட போதிலும் மக்கள் பெயரளவில் போட்டியிடும் கட்சிகள், குழுக்கள் என்பவற்றை தவிர்த்து வெற்றிபெறும் கட்சிகளுக்கே தங்கள் வாக்குகளை இட்டு பெறுமதியாக்கியுள்ளனர்.

இதனை மேலும் அறிந்து கொள்ள விரும்புபவர்கள் தேர்தல் திணைக்கள இணையத் தளத்திற்குச் சென்று கடந்தகாலத் தேர்தல் முடிவுகளை ஆராய்ந்து பார்க்கலாம்.

வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கு ஜனநாயக நாட்டில் எவருக்கும் உரிமை உண்டு. வாக்களிப்பதும் அவரவர் விருப்பமும் உரிமையுமாகும். ஆனால் ஜனநாயகம் மனி. உரிமை எனும் பேரில் நினைத்தபடி எல்லாம் நடப்பது சமூகத்துக்கு நல்லதல்ல. இது அரசியலுக்கும் பொருந்தும்.

நான் தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட காலத்தில் வாக்குச்சீட்டின் நீளம், வாக்களிக்கும் நிலையம் மற்றம் வாக்கெண்ணும் நிலையம் என்பவற்றில் வேட்பாளர்களின் முகவர்களுக்கு ஆசனம் ஒதுக்குவது போன்றவற்றில் உள்ள சிரமங்களை அவதானித்தபோது, ஐந்து வீதத்துக்குக் குறைவான வாக்குகளைப் பெறும் கட்சிகள், சுயேச்சைக் குழுக்களிடமிருந்து தேர்தல்செலவின் ஒருபகுதியை அறவிடவேண்டும் எனும் ஒரு கருத்தை தேர்தல் தொடர்பான கருத்தரங்குகளில் நான் சொல்வதுண்டு. அண்மையில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரும் ஒரு பேட்டியில் தேர்தல் கட்டுப்பணம் பெரிய அளவில் அதிகரிக்கப்பட வேண்டுமென்று சிரித்துச் சிரித்து சொன்னார்.

இதனை நான் மனவேதனையோடு ஏன் சொல்கிறேன் என்றால் நாடாளுமன்றத்தில் தமிழ்நாடாளுமன்ற உறுப்பினரின் உரையை வெட்டிப் பேசுவதில் முன்னிற்பது பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினரை விட எம்மால் தெரிவு செய்யப்பட்ட இன்னொரு கட்சித் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினராகவே இருப்பர். அல்லது கட்சி தாவியவராக இருப்பர் என்பதை பலமுறை நாடாளுமன்றில் பார்த்துள்ளேன் என்பதாலாகும்.

தமிழ் மக்கள் சார்பில் - அதுவும் முக்கியமாக வடக்கு, கிழக்கு மக்கள் சார்பில் - ஏதாவது ஒரு கட்சியே அறுதிப் பெரும்பான்மையைப் பெறவேண்டும். இதுவே இன்றைய காலத்தின் தேவை. இதனை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு கட்சியிலும் ஒவ்வொரு நல்லவர் இருக்கலாம். வல்லவரும் இருக்கலாம் ஆனால் விகிதாசார தேர்தலில் ஒவ்வொரு கட்சியிலுமிருந்து ஒவ்வொருவரை தெரிந்தனுப்புதல் சாத்தியமானதல்ல. அதேபோல் ஒரு மாவட்டத்துக்கு ஒன்று அல்லது வடக்குக்கு ஒன்று, கிழக்குக்கு ஒன்றாக வேறு வேறு கட்சிகளை ஆதரிப்பதும் ஆரோக்கியமானதுமல்ல. ஒரு கட்சியை மட்டுமே ஆதரிப்பது மிக மிக உசிதமாகும்.

ஆதலால் நிச்சயம் ஒவ்வொருவரும் வாக்களிக்கவேண்டும். வடக்கு, கிழக்கில் உள்ள சகல மாவட்டங்களிலும் பலமுள்ள ஒரு கட்சியை மட்டும் நாடாளுமன்றம் அனுப்புதல் வேண்டும் என்பதே அனுபவபூர்வமான காலத்தின் தேவை.

தமிழ் மக்கள் சிந்திப்பார்களா? வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் ஒன்றாக நிற்கிறார்கள் என்பதை உலகுக்குக் காட்டுவார்களா? அல்லது சொந்தபந்தம், அண்ணன் -தம்பி, மாமன் - மச்சான், நண்பன், அயலவன், ஊரவன் அல்லது பட்டம், பதவி, வேலைவாய்ப்பு, வீடு ,ரோடு, அவன் செய்யவில்லை, இவனுக்குப் போட்டுப் பார்ப்போம் என சுயநலப் போக்கில் வாக்கைச் சிதறடித்துப் பிரயோசனமற்றதாக்குவார்களா?

# கொழும்பின் புதிய துணை ஆயராக யாழ் மைந்தன் மேதகு அன்ரன் றஞ்சித் பிள்ளைநாயகம் அடிகளார்

கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் புதிய துணை ஆயராக யாழ் மண்ணின் மைந்தன் மேதகு அன்ரன் றஞ்சித் பிள்ளைநாயகம் அடிகளார் 13 ஜுலை 2020 அன்று அதிகார பூர்வமாக திருத்தந்தையால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரின் ஆயர்ப்பட்ட திருநிலைப்படுத்தல் சடங்கு 29 ஓகஸ்ட் 2020 அன்று கொழும்பு கொட்டாஞ்சேனை புனித லூசியா பேராலயத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் முதல் தமிழ் ஆயரான இம்மானுவேல் பர்ணான்டோ ஆண்டகை மன்னார் மறைமாவட்டத்தின் ஆயராக நியமனம் பெற்றமையால் ஏற்பட்ட வெற்றிடம் இந்த நியமனத்தின் மூலம் நிரப்பப்பட்டு கொழும்பு உயர் மறைமாவட்டத்திற்கு இரண்டாவதாக தடவையாகவும் ஒரு தமிழ் ஆயர் கிடைத்துள்ளார் என இலங்கை வாழ் தமிழ் கத்தோலிக்க மக்கள் மகிழ்ச்சி அடையலாம்.

கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் பேராயர் மேதகு கலாநிதி மல்கம் கருதினால் றஞசித் ஆண்டகைக்கு ஏற்கனவே 2011ஆம் ஆண்டு திருநிலைப்படுத்தப்பட்ட மேதகு கலாநிதி மக்ஸ்வெல் சில்வா (வயது 66) மற்றும் 2018ஆம் ஆண்டு திருநிலைப்படுத்தப்பட்ட மேதகு கலாநிதி ஜே.டி. அன்ரனி ஜெயக்கொடி (வயது 61) ஆகிய இரண்டு சிங்கள துணை ஆயர்கள் இருக்கும் நிலையில், கொழும்பு வாழ் தமிழ் மக்களின் தேவைகளைக் குறிப்பாகக் கவனிக்க மூன்றாவதாக ஒரு தமிழ் துணை ஆயராக மேதகு அன்ரன் றஞ்சித் பிள்ளைநாயகம் அடிகளார் (வயது 53) நியமிக்கப்பட்டுள்ளார்.

2019ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதல் கொழும்பு மொரட்டுவ செபஸ்ரியன் கல்லூரியின் அதிபராகப் பணியாற்றி வரும் இவர், 2019ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் முதல் 2019 ஜுலை வரை கொழும்பு சூசையப்பர் கல்லூரியின் பதில் அதிபராகப் பணியாற்றியவர். இதற்கு முன்னதாக 2014 முதல் 2019 வரை இதே கொழும்பு சூசையப்பர் கல்லூரியில் உப அதிபராகவும், 2008ஆம் ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை புனித இராயப்பர் கல்லூரியின் உப அதிபராகவும் பணியாற்றியுள்ளார். இவர் 2007ஆம் ஆண்டு முதல் 2008ஆம் ஆண்டு வரை கொழும்பு சூசையப்பர் கல்லூரியின் ஆரம்ப பிரிவு பொறுப்பாளராகவும், 2006 முதல் 2007 வரை கொழும்பு மொரட்டுவ செபஸ்ரியன் கல்லூரியின் கல்வி முகாமையாளராகவும் பணி புரிந்தமை குறிப்பிடத்தக்கது. 2010 – 2012 ஆண்டு காலப்பகுதியில் புனித இராயப்பர் கல்லூரியின் உடுகம்பொல கிளைப் பாடசாலையின் தலைமை ஆசிரியராகவும், 2009 முதல் 2010 வரை கொழும்பு உயர் மறைமாவட்டக் கல்வி நிலையத்தில் உதவி இயக்குனராகவும், 2006 – 2011 காலப்பகுதியில் புனித யோசவ்வாஸ் இறையியலகத்தின் தமிழ்ப்பகுதி இணைப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். 2015ஆம்



ஆண்டு முதல் இன்று வரை இறையடியார் தோமஸ் கருதினால் கூறே ஆண்டகையின் புனிதர் பட்ட குழுவில் பணியாற்றுகிறார்.

2012 – 2017 ஆண்டு காலப்பகுதியில் யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறையில் கிறிஸ்தவ முதுதத்துவமாணிப்பட்டத்தை பகுதி நேர மாணவனாக நிறைவு செய்த இவர், 2004 முதல் 2005 வரை இலணடன் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் முதுகலைமாணிப்பட்டத்தைப் பெற்றார். 2001ஆம் ஆண்டு முதல் 2003ஆம் ஆண்டு வரை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வியியல் பட்டபின் டிப்புளோமா பட்டத்தைப் பெற்றுள்ளார்.

இவர் 16 செப்டெம்பர் 2000 ஆம் ஆண்டு பேராயர் மேதகு கலாநிதி நீக்கிலஸ் மாக்கஸ் பர்னாண்டோ ஆண்டகையால் கொழும்பு உயர் மறைவட்டத்தின் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். 2000ஆம் ஆண்டு முதல் 2004ஆம் ஆண்டுகாலப் பகுதியில் புனித இராயப்பர் கல்லூரியில் கல்வி முகாமையாளர் – உயர்தர மாணவர்களின் பொறுப்பாளர் – ஆரம்ப பகுதிப் பொறுப்பாளர் – உப அதிபர் எனப் பலதரப்பட்ட பணிகளை ஆற்றியுள்ளார்.

08 ஜனவரி 2000 ஆம் ஆண்டு தியாக்கோன் பட்டத்தைப் பெற்ற இவர் 1995 – 2000 ஆண்டு காலப்பகுதியில் கண்டி அம்பிற்றிய தேசிய குருமடத்தில் இறையியல் கல்வியை மேற்கொண்டு உரோமை உர்பாணியா பல்கலைக்கழக இறையியல் இளங்கலைமாணிப் பட்டத்தைப் பெற்றார்.

1985 – 1988 காலப்பகுதியில் யாழ்ப்பாணம் கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் மெய்யியல் கல்வியை மேற்கொண்ட இவர் 1988 – 1993 ஆண்டு காலப்பகுதியில் யாழ் பல்கலைக்கழகத்தில் கணிதத்துறையில் விசேட இளங்கலைமாணிப் பட்டத்தைப் பெற்று 1993 – 1994 ஆண்டு காலப்பகுதியில் யாழ் பல்கலைக்கழகத்தில் அதே துறையில் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றினார். 1990 – 1995 ஆண்டு காலப்பகுதியில் தனியார் நிறுவனங்களில் கணிதத்துறை உயர்தர மாணவர்களுக்கு ஆசிரியப் பணி புரிந்த இவர் 1995இல் கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் இணைந்து கொழும்பு பொறள்ள அலோசியஸ் சிறிய குருமடத்தில் சிங்கள மொழியைக் கற்றுக்கொண்டார்.

யாழ்ப்பாணம் தீவுப்பகுதியின் கரம்பொன் மண்ணைப் பிறப்பிடமாகவும் (23 செப்டம்பர் 1966) யாழ் அடைக்கல அன்னை ஆலயத்தை சொந்தப் பங்காகவும் கொண்ட மேதகு அன்ரன் றஞ்சித் பிள்ளைநாயகம் அடிகளார் மறைந்த ஈ.ஜே.அருமைநாயகம் அடிகளாரின் நெறிப்படுத்தலில் குருத்துவ அழைப்பைப் பெற்றவர்.

1973ஆம் ஆண்டு கொழும்பு கொட்டகெனா புனித பெனடிக்ஸ் கல்லூரியில் ஓராண்டு ஆரம்ப கல்வியை மேற்கொண்ட பின்னர் 1974 – 1985 ஆண்டுகாலப்பகுதியில் 12 ஆண்டுகள் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் கல்வி கற்று யாழ் பல்கலைக்கழகம் நுழைந்தவர்.

இவரின் தந்தையார் அன்ரனி பிள்ளைநாயகம் அவர்கள் மறைந்து போனாலும் தாயார் திருமதி அன்ரனி பிள்ளைநாயகம் அவர்களும் இவரின் இரணைச் சகோதரரான அஜித் பிள்ளைநாயகம் அவர்களும் இறைவனுக்கு நன்றி கூறி மகிழ்வர்.

கொழும்பு மறைமாவட்டத்தின் புதிய துணை ஆயர், யாழ் மண்ணின் மைந்தன் மேதகு அன்ரன் றஞ்சித் பிள்ளைநாயகம் அடிகளாரின் பணி சிறக்க காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களின் இறையாசீர் மிக்க வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

காலைக்கதிர்
Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி – யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
- ஊடக விரிவுரையாளர்

# கிளிநொச்சி ஆரோபணம் இளைஞர் இல்ல புனரமைக்கப்பட்ட கட்டடத் தொகுதி திறப்பு

## யாழ் ஆயர் திறந்து வைத்தார்



கிளிநொச்சி உருத்திரபுரம் டி8இல் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆரோபணம் இளைஞர் இல்ல நிறுவுநர் சூசைநாதர் மண்டபமும் புனரமைக்கப்பட்ட கட்டடத் தொகுதியும் வயல் பகுதியில் புதிதாக புனரமைக்கப்பட்ட புனித செபஸ்தியார் சுருபமும் 14 ஜுலை 2020 அன்று யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டன. மண்டபத்தைத் திறந்து வைத்துப் பால் காய்ச்சும் படத்தையும், ஆயர் சம்பிரதாயபூர்வமாக நெல் அறுவடை நிகழ்வை ஆரம்பித்து வைக்கும் படத்தையும் காலைக்கதிர் கிறிஸ்தவ அன்பு நெஞ்சங்களின் பார்வைக்குத் தருகிறோம்.



காலைக்கதிர் Kalaikkathir

# கொழும்புத் துறைமுக கிழக்கு முனையம்: இந்திய தரப்பிலிருந்து கடும் அழுத்தமாம்

கொழும்பு,ஜூலை 19

இந்திய அரசின் அழுத்தங்கள் காரணமாகவே கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தில் கொள்கலன்களை கையாளும் பணிகளை ஆரம்பிக்க முடியாமல் இருப்பதாக துறைமுக அதிகார சபையின் தலைவர் ஓய்வுபெற்ற இராணுவ தளபதி தயா ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

துறைமுக அதிகார சபையின் தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் வியாழனன்று நடைபெற்ற பேச்சுகளின் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இந்தியாவின் அழுத்தங்கள் காரணமாக பணிகளை ஆரம்ப முடியாமல் இருப்பதாகவும் இது சம்பந்தமாக தீர்மானம் ஒன்றை எடுக்கத் தனக்கு கால அவகாசத்தை வழங்குமாறும் தயா ரத்நாயக்க தொழிற்சங்க பிரதிநிதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கு பதிலளித்துள்ள தொழிற்சங்க பிரதிநிதிகள் எதிர்காலத்தில் தாம் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட நேரிடும் என எச்சரித்துள்ளனர்.

இதேவேளை கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை தனியார் துறைக்கு வழங்க அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை தொடர்பாகவும் அது சம்பந்தமான இரகசிய உடன்படிக்கையை வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அகில இலங்கை துறைமுக பொது ஊழியர் சங்கத்தின் செயலாளர் சந்திரசிறி கமகே தெரிவித்துள்ளார்.



## அடிகாயங்களுடன் வீதியோரத்தில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்பு

கொஸ்கொடை பொலிஸ் பிரிவுக்ககுட்பட்ட பான்வெல்துவ – சுதுவெலிபொத வீதிக்கு அருகில் நேற்றுக் காலை சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

போகஹவெல, ஊரகஸ்மன் ஹங்திய பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய குடும்பஸ்தரின் சடலமே மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பலப்பிட்டிய நீதிமன்ற நீதிவானினால் மரண விசாரணை நடத்தப்பட்டதைத் தொடர்ந்து, சடலம் பிரேத பரிசோதனைக்காக பலப்பிட்டிய வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

உயிரிழந்தவரின் முகத்தில் அடிகாயங்கள் காணப்படுகின்றன. அவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தக் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் தொடர்பில் இதுவரையில் தகவல்கள் எதுவும் தெரியவரவில்லை எனப்பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

சந்தேகநபரை அடையாளம் கண்டு கைதுசெய்வதற்காகக் கொஸ்கொட பொலிஸார் விரிவான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## 24 மணித்தியாலங்களில் 1,824 பேர் சிக்கினார்கள்!

கடந்த 16ஆம் திகதி நள்ளிரவு 12 மணி முதல் நேற்றுமுன்தினம் (17) நள்ளிரவு 12 மணி வரையான 24 மணித்தியால காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின்போது பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 1,824 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள், ஆயுதங்கள், சட்டவிரோத மதுபானம் வைத்திருந்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இந்தச் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்களில் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட 386 பேரும், ஏனைய குற்றங்களை இழைத்த குற்றச்சாட்டில் 665 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் 232 பேரும், கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் 180 பேரும், ஐஸ் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 08 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆயுதங்கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 02 பேரும், சட்டவிரோத மதுபானம் வைத்திருந்த குற்றச்சாட்டில் 351 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்புகளின்போது ரிபிட்டர் வகை துப்பாக்கி 01, வாள் 01, கத்தி 01 ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்தோடு, சட்டவிரோத மதுபானம் 3,667 லீற்றர் கைப்பற்றப்பட்டுள்ளது எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.



# தமிழ் மக்கள் தேசிய கூட்டணியே வடக்கு, கிழக்கு தமிழரின் தெரிவு

## முன்னாள் எம்.பி. சுரேஷ் எடுத்துரைப்பு



**வடக்கு, கிழக்கு தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இன்றைக்கு இருக்கக் கூடிய ஒரே தெரிவாக ஒருமித்துச் செயற்படுகின்ற தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியே உள்ளது. அதற்குத் தமிழ் மக்கள் முழுமையான ஆதரவை வழுங்க வேண்டும்.**

**– இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் யாழ்.மாவட்ட வேட்பாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது: –

தேர்தலில் பல்வேறுபட்ட அரசியற் கட்சிகளில் அரசுக்குச் சார்பாக இருக்கக் கூடியவர்கள், அதே நேரம் அரச சின்னங்களில் கேட்கக் கூடிய கட்சிகளாக சுயேச்சைக் குழுக்களாக இருக்கக் கூடிய பலர் தாங்கள் வென்று வருவதன் மூலம் அரசைப் பலப்படுத்தலாம் என்று இருக்கின்றார்கள். ஆகவே, இப்போது பல தரப்பினர்கள் – ஏறத்தாழ எட்டு முதல் பத்திற்குள் – அவர்கள் சுயேச்சைகளாகவும் அரசியல் கட்சிகளாகவும் கோட்டாபயவின் அரசைப் பலப்படுத்தவதை நோக்கமாகக் கொண்டும் வாக்குகளைப் பிரிப்பதை நோக்கமாகக் கொண்டும் களத்தில் இறங்கியிருக்கின்றார்கள்.

தமிழ் மக்களுக்கு குறைந்தபட்சம் ஒரு நீதியைக் கொடுக்கத் தயாராக இல்லாத அரசுக்கு – மிகவும் திமிர்த்தனத்துடனும் ஆணவத்துடனும் செயற்படுகின்ற அரசுக்கு – இன்னும் கூறுவதானால் வடக்கு – கிழக்கை ஒரு சிங்கள பௌத்த மேலாதிக்கத்துக்குள் அடக்க முயற்சிக்கும் அரசுக்கு – வாக்குப் போடுவது என்பது எவ்வளவு சரியானது என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அவ்வாறான வாக்குகள் தமிழினத்தினுடைய எதிர்காலத்துக்கு நிச்சயமாகப் பாதகமாக அமையும். அவர்களுக்கு சாதகமாக ஓர் ஆசனம் கிடைத்தால் கூட தங்களது தமிழின விரோத கொள்கைகள் எல்லாவற்றையும் தமிழ் மக்களும் ஏற்றுக்கொண்டிருக்கின்றோம் என்ற நிலைப்பாட்டின் அடிபடையில்தான் அவர்கள் பிரசாரம் செய்வார்கள். அதனை இங்கு மாத்திரமல்ல, வெளிநாடுகளில் கூட கூறுவார்கள். அதாவது வடக்கு மாகாணத்திலோ அல்லது கிழக்கு மாகாணத்திலோ தமிழ் மக்கள் தங்களுக்கு வாக்களித்திருக்கிறார்கள் என்றொரு செய்தியை அவர்கள் சொல்லக் கூடும்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் வரப் போகின்ற ஓர் இராணுவ ஆட்சியில் சுமந்திரன் போன்றோர் அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொள்ளப் போகின்றார்கள் எனக் கூறி வருகின்றனர். அதாவது ஒரு பக்கத்தில் இராணுவ ஆட்சி வரப் போகின்றது எனக் கூறுகின்றனர். மறுபக்கத்தில் பார்ப்பதானால் எங்களுக்கு அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொள்ளப் போகிறோம் என்றும், அரசியல் தீர்வு எப்போது வரும் எனத் தெரியாது. ஆகவே, அது வரை அமைச்சர்களாக இருந்து நாங்கள் அபிவிருத்தியை செய்யப் போகின்றோம் என்ற தொனியில் கருத்துக் கூறுகின்றனர்.

இந்த விடயத்தில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயாவைப் பார்த்தால் அவர் என்ன கூறுகின்றார்? இது ஒரு தேர்தல் காலம். அமைச்சர் பதவிகள் பற்றிப் பேச வேண்டிய அவசியம் இப்போது தேவையில்லை. ஆக தேர்தலுக்குப் பிற்பாடு அமைச்சுப் பதவிகள் தொடர்பில் சம்பந்தன் ஐயா கூடப் பேசுவாரா என்ற கேள்வியும் எழுகின்றது.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஒன்று மாத்திரம்தான் இப்போது தமிழ் மக்களினுடைய தேசிய இனப்பிரச்சினை, தமிழ் மக்களுடைய இருப்பைப் பாதுகாத்தல், தமிழ் மக்களுக்கான சரியான ஓர்வ் அபிவிருத்தித் திட்டம் – முக்கியமாக வேலை வாய்ப்பை மையமாகக் கொண்ட அபிவிருத்தித் திட்டம் – போன்ற எல்லாவற்றையும் மையமாக வைத்துச் செயற்படுகின்றது

இந்த நேரத்தில் தமிழ் மக்களுக்கு இருக்கக் கூடிய ஒரே ஒரு தெரிவாக தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியே இருக்கின்றது. குறைந்த பட்சம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து விலகிய அனைவரையும் ஒன்றுபடுத்தி நாங்கள் ஒரு கூட்டணியை உருவாக்கியிருக்கின்றோம். இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் இணைய வேண்டும் என்பதற்காக மிக நீண்ட காலம் முயற்சி செய்தோம். குறிப்பாக சுமார் ஒன்றரை வருடங்களாக முயற்சி செய்து உள்நாட்லும் புலம் பெயர் தேசங்களிலிருந்தும் பல பேர் அவர்களுடன் பேசினார்கள். ஆனால் அவர்கள் அதற்கு ஒத்து வரவில்லை என்பதுதான் யதார்த்தம்.

ஆகவே, இன்றைய சூழலில் உண்மையான ஒரு கூட்டணியை உருவாக்கியிருக்கிறோம். தேர்தலுக்குப் பிற்பாடு இந்தக் கூட்டணியானது எங்களது கொள்கைகளை ஏற்றுவரக் கூடிய ஏனையோரையும் உள்ளடக்கும். நாங்கள் தமிழ் மக்களது உரிமைகளுக்காகக் குரல் கொடுக்க வேண்டுமாக இருந்தால் எங்களுடைய ஐக்கியம் பலப்பட வேண்டும் என்பதில் எங்களுக்கு மாற்றுக் கருத்து கிடையாது – என்றார்.

காப்புக்கருவிகள் மற்றும் சாதனங்கள்




3PLY Mask- 25/- 5PLY KN95 Mask- 275/- Child KN95 Mask- 360/-

Hand Sanitizer Gel,Liquid
50ml. 165/-
100ml. 265/-
200ml. 375/-
500ml. 485/-
5Litter. 3950/-

High Quality Hand Wash
200ml. 175/-
500ml. 245/-
1Litter. 350/-
4Litter. 1100/-

Disinfectant Liquid
1Litter.750/-
3Litter.2200/-
5Litter.3600/-
condition apply

NORTH LEAD DISTRIBUTORS
#253, Stanly Road, Jaffna

அழையுங்கள்
0774192275
0772533390

காலைக்கதிர் Kalaikkathir

பத்திரிகைத்துறை வெற்றிடங்கள்

- உதவி ஆசிரியர்
- ஒப்பு நோக்கர்கள்

முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்

தொடர்புகளுக்கு:-
காலைக்கதிர்
இல - 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
076 443 8622

# ஒற்றுமையின்மையே தோல்விக்குக் காரணம்

## மனந்திறக்கின்றது ஐ.தே.க கட்சி

கொழும்பு, ஜூலை 19

ஐக்கிய தேசியக் கட்சியின் ஒற்றுமை சிதைந்துபோன சகல சந்தர்ப்பங்களிலும் கட்சிக்குத் தோல்விகளே கிடைத்துள்ளன.

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பல்வேறு சூழ்ச்சிகள் காணப்பட்டன. கட்சியின் தலைமைத்துவத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிக் கொண்டு பயணிக்கும் செயற்பாடுகளிலிருந்து கட்சி உறுப்பினர்கள் சிலர் விலகியிருந்தனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தனிக் குழுக்களை அமைத்துக் கொண்டு கட்சிக்குள் செயற்பட முடியாது. கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கட்சி உறுப்பினர்கள் ஆதரவாக இருந்திருந்தால் 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை வெற்றியடைந்திருப்போம்.

அந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி கொண்டு இரு தடவைகள் நாட்டை ஆண்டுவிட்டு மீண்டும் சஜித்தை ஜனாதிபதியாக்கியிருப்போம் – என்றார்.

விசேட கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்தில் வசிக்கும் போரால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கும் புனர்வாழ்வு பெற்ற போராளிகள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பத்தைக் கொண்டவர்களுக்கும் உங்களுடைய சமூகமயப்படுத்தலில் உள்ள குறைபாடுகளையும் எதிர்காலத்தை மையப்படுத்திய வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் ஏனைய பிரச்சினை தொடர்பான விசேட கலந்துரையாடல்.

இடம்:- வின்சர் பட மாளிகை (வின்சர் தியேட்டர்)
இல 140, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
காலம்:- 19.07.2020 (ஞாயிறு) முற்பகல் 10.30 மணியளவில்.

உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்

2020 நாடாளுமன்றத் தேர்தலும் எனது அரசியல் பிரவேசமும்

பரநிருபசிங்கம் வரதராஜசிங்கம் (விண்ணன்)
ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி

# எனது அன்புக்குரிய வாக்காளப் பெருமக்களே!

## 'உங்கள் வாக்கு உங்கள் உரிமை சரியான முறையில் வாக்களியுங்கள்!'

2001 ஆம் ஆண்டு தொடக்கம் 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல் தேசியத் தலைவரின் கட்டுப்பாட்டுக்குள் இயங்கிய அரசியலில் நாடாளுமன்றத் தெரிவுக் காலப்பகுதி.

2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரைக்கும் இறுதி யுத்தகாலப் பகுதியும் தேசியத் தலைவரையும் எமது சகோதரங்களையும் தேசியத்தையும் அழிப்பதற்குத் துணைபோன காலப்பகுதி.

2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 வரைக்கும் நீங்கள் போட்ட வாக்குகளால் எமது தேசமும் எமது மக்களும் முழுமையாக ஏமாற்றப்பட்டு சிதறடிக்கப்பட்ட காலப்பகுதி.

2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு காலப்பகுதி நான்காவது தடவையாக முற்று முழுதாகத் தமிழ்த் தேசம் சின்னாபின்னமாக்கப்பட்டு சிதறடிக்கப்பட்டு, இன்றைய தலைமுறை இளைஞர்களை வாள்வெட்டுக்கு அழைத்துச்சென்று, போதைப்பாவனை, கஞ்சாப்பாவனை, கடத்தல், கொள்ளை, கலாச்சார சீரழிவு மற்றும் பல பல பல...... பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் தேசமாக எங்களுடைய தேசத்தைக் கொண்டு சென்ற அரசியல் வாதிகளின் காலப்பகுதி... தொடர்வதற்கு அனுமதியோம்.

2020 ஆம் ஆண்டுத் தேர்தலில் நான் உங்களிடம் கேட்பது, எங்களுடைய தமிழ்த் தேசத்தை பொருளாதார ரீதியாக கட்டியெழுப்புவதற்கு பல்லாயிரக் கணக்கான இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கான திட்டம் என்னிடம் இருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலம் தமிழ்த் தேசம் அபிவிருத்தியடையும் என்பதை உங்களுக்கு உறுதிபடக் கூறுகின்றேன்.

2020 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல், வரலாற்றில் மிக முக்கியமான தேர்தல்.

* நாட்டின் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச அவர்கள் ஆட்சி செய்யும் காலம்.
* மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் முன்னாள் ஜனாதிபதியாகவும் தற்போதைய பிரதமராக ஆட்சி செய்யும் காலம்.
* முன்னாள் ஜனாதிபதியான இருந்த மைத்திரிபால சிறிசேன அவர்கள் அங்கம் வகிக்கும் அரசாங்கமாக அமையப் போகின்றது.

ஒரே நேர் கோட்டில் மூன்று ஜனாதிபதிகள் ஆட்சி செய்யும் அரசாங்கத்தில் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை நன்றாகத் தெரிந்தவர்கள் என்ற முறையிலும் ஒரு யுத்தத்தை முடித்தவர்கள் என்ற ரீதியிலும் நான் அவர்களுடன் எங்களுடைய மக்களின் முழுப் பிரச்சினைகளுக்கும் நீங்களே பொறுப்பானவர்கள் என்றும், அதற்குரிய சகல பொறுப்புக்களில் இருந்தும் நீங்கள் விலகி விடமுடியாதென்றும், மக்களுடைய சகல பிரச்சினைகளுக்கும் நீங்கள் முகம் கொடுக்க வேண்டும் என்றும் கேட்கும் உரிமையை எனக்கு நீங்கள் வாக்களிப்பதன் மூலம் தந்தால், நான் நாடாளுமன்றத்தின் பெரும்பான்மைக் கட்சியில் இருந்து குரல் கொடுப்பேன் என்று உங்களிடம் உறுதியாகக் கூறுகின்றேன்.

தமிழ்த் தேசத்தின் எங்கள் மக்களுடைய எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு நாடாளுமன்றத்தில் இருந்து கிடைக்கவேண்டும் என்பதில் எந்த வித ஐயப்பாடும் இல்லை.



தமிழ்த் தேசியமும் தமிழ்த் தாயும் வாழ்க.

X 5

# விண்ணன்

ப.வரதராஜசிங்கம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.07.2020 இல் வெளியிடப்பெற்றது.